கிறிஸ்மஸ் சிறப்பிதழ்
இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 19 | திகதி : 25.12.2022 | விலை : 100.00

## இனி விடியும்

எழுத்துப் பிழைகளால்
நிறையும் பக்கங்களை
'தலை எழுத்து' – என
தாங்கி நடக்கிறோம்

கொரோணா திணித்த
பிணத் துணிகள் அவிழ்த்து
மனசு நிறையச் சுவாசிக்கிறோம்
நெஞ்சடைக்கிறது விலைவாசி

நோயாளர் காவுவண்டியின்
அபாய ஒலியாக
அச்சுறுத்துகிறது வாழ்வு
தலைமேல் தொங்கும் கத்திகளோடு

எரிபொருள் வரிசைகளிலும்
எரிவாயு இல்லாமலும்
எருமை மாடுகளைப் போலவும்
வாழப் பழக்கியது நாடு

வற்றிக் காய்ந்த
இரசப் பாத்திரங்களில்
தண்ணீர் நிரப்பிக் காத்திருக்கின்றன
எம் திருமண வீடுகள்

சவக்காலைக் கிடங்குகளில்
விழுந்து நிறைகிறது
கஞ்சாத் தலைமுறை
இருட்டு எம்மைத் தின்கின்றது

இத்தனையும் இருந்தும்
இனி விடியும் என
வாசல் பார்த்துக் காத்திருக்கிறோம்
உலகச் சூரியனே இயேசுவே!

நிச்சயம்
இனி விடியும் உம் வரவால்
எம் கண்ணீர்க்கதை முடியும்
இனி விடியும் பாலனே!

- அருட்பணி. சி. அஜந்தன்

## திருத்தந்தையின் நத்தார் செய்தி



மாட்டுத்தொழுவத்தில் நிகழ்ந்த இயேசுவின் பிறப்பு நம்மை நாம் தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றது. மின் விளக்குகளோடு ஒளிரும் கிறிஸ்மஸ் மரம் பலநேரங்களில் பாவம், அச்சம் மற்றும் வேதனையால் நிறைந்துள்ள நம் வாழ்வின் இருளை ஒளிர்விக்க வருகின்ற இயேசுவை நினைவுபடுத்துகின்றது.

அன்பே உருவான பாலக இயேசுவின் பிறப்பு, பகைமையைக் களைந்து, அன்பையும், அமைதியையும் குடும்ப உறவுகளிலும், குடும்பங்களுக்கு இடையேயும், சமூகங்களுக்கு இடையேயும், நாடுகளுக்கு இடையேயும் ஏற்படுத்த அழைப்பு விடுக்கின்றது. எனவே எம் உறவு நிலைகளில் உள்ள பகைமை உணர்வினை விடுத்து, பாலக இயேசுவின் பிறப்பு விழாவை மகிழ்வுடன் கொண்டாடுவோம். பாலக இயேசுவின் இறையாசீர் உங்களோடு என்றும் இருப்பதாக.

## பகிர்வின் உணர்வோடு அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடி மகிழ்வோம்

### நத்தார் செய்தியில் யாழ் ஆயர்



நாம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு விழாவினை மீண்டும் கொண்டாடி மகிழ இருக்கின்றோம். வானோர் இன்னிசை பாட, மண்ணுலகோர் அக்களிப்பில் ஆர்ப்பரிக்க, இறைமகன் நமக்காக மனுமகனாகப் பிறந்திருக்கின்றார். *உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதியும் உண்டாகின்றது. (காண். லூக். 2:14)*

ஒரு வார்த்தையினால் இவ்வுலகை உண்டாக்கிய இறைவன், அதே வார்த்தையினால் பாவ வாழ்விலிருந்த இம் மனுக்குலத்தை மீட்டிருக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்யாமல், வார்த்தையான தனது திருமகனை நம்மிடையே மனுமகனாக வாழ அனுப்பி வைத்திருக்கின்றார். ஆலயங்களை அலங்கரிப்பது, குடில்கள் தயாரிப்பது, புத்தாடைகள் உடுத்துவது எனும் நிகழ்வுகளோடு கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டம் நின்றுவிடக்கூடாது. மாறாக கிறிஸ்து பிறப்பு விழா என்பது ஈகையின் விழாவாகும். இறைமகன் இயேசு எம்மைப் பாவநிலையிலிருந்து மீட்பதற்காகத் தம்மையே வெறுமையாக்கி மனிதன் ஆனார் . தம்மையே வெறுமையாக்கியதன் வழியாக நாமும் பிறருக்காக எம்மிடமுள்ளவற்றைப் பகிர்ந்து வாழவேண்டுமென விரும்புகின்றார். ☞ 15




2023

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## எமது எண்ணம்

### மாறிவரும் உலகில் இயேசுவின் பிறப்பு

இறை விசுவாசமுள்ள நீதிமான்கள் எப்போதும் நெறி தவறியதில்லை. தவறப்போவதும் இல்லை. பாலக இயேசுவின் பிறப்பின் காரண காரியங்களும் உலகத்துக்குக் கற்பித்ததும் இதைத்தான். இன்றும் இயேசுவின் பிறப்பு இக்கூற்றையே வலியுறுத்தி நிற்கின்றது. ஆனால் அதன் வழிநடப்போர் யார் என்பதுதான் இங்கே கேள்வி.

போதனைகள், தத்துவங்கள் போன்ற ஆன்மீகக் கருத்துக்களை ஆழமாக ஊன்றிக் கற்கும் அளவுக்கு அதன் செயற்திறன் அரிதாகி வருகின்றது. யதார்த்தமாகச் சிந்திப்போம், யதார்த்தமாகப் பேசுவோம் என்று சொல்வோர்கூட யாதர்த்தம் என்பதன் உண்மை வரைவிலக்கணத்தைப் புரிந்துகொள்ள மறுக்கின்றனர்.

உன்னிடத்தில் இருப்பதைக் கொடு என்பதை உலகத்தின் பொதுக் கருத்தாக ஏற்றுக் கொண்டாலும், இருப்பதைக் கொடுக்கும் மன நிலையில் வாழ்வோரின் எண்ணிக்கையைக் கைவிரல் விட்டு எண்ண முடியும். அந்தளவுக்கு அயலவனை நேசிப்போர் குறைவடைந்தே வருகின்றனர்.

உலகத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் வெவ்வேறு வடிவங்களில் வளர்ச்சி கண்டு வரும் நிலையில், உறவுகள் - நண்பர்கள் ஆகியோருடன் நேரத்தைச் செலவழிக்க முடியாமல் போகும் சூழல்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

பெற்றோரை. ஆசிரியரை, முதியவர்களை மதித்தல் மற்றும் சிறுவர்களோடு உரையாடுதல் போன்ற அடிப்படை மனிதப் பண்புகள் அரிதாகிக் கொண்டு வருகின்றன. கையடக்கத் தொலை பேசிகளில் நேரத்தைச் செலவழிக்கும் அளவுக்குப் பெற்றோருடன், உறவினர்களுடன் அமர்ந்திருந்து பேச பலருக்குத் தற்போது நேரம் கிடைப்பதில்லை.

கணவன், மனைவி, பிள்ளைகள் கூட வெவ்வேறு திசைகளாகித் தத்தமது கையடக்கத் தொலைபேசிகளுடன் காலத்தைக் கழிக்கின்றனர். இருபத்தோராம் நூற்றாண்டின் காலப்பகுதியில் தனிமையில் இருப்பதுதான் வாழ்க்கை என்றாகி விட்டது. கையடக்கத் தொலைபேசியுடன் அமர்ந்திருந்து அதன் ஊடே உலகத்தைப் பார்ப்பதையே இங்கு தனிமை என்று குறிப்பிடலாம்.

ஆகவே சமூகச் சீர்திருத்தங்கள் உலக வளர்ச்சிக்கு ஏற்ப மாறிவரும் சூழலிலும், மனிதப் பண்புகளை மேம்படுத்தக் கூடியவர்களையே திருஅவை இன்று வேண்டி நிற்கின்றது. இறை விசுவாசமுள்ள நம்பிக்கையாளர்களின் பிரதான கடமைகளில் இது முக்கியமானது.

சமூக மாற்றம் என்ற போர்வையில் இளையோரிடம் திணிக்கப்பட்டு வரும் மனிதப் பண்புக்கு மாறான பழக்க வழக்கங்கள் விஞ்சிக் காணப்படும் இன்றைய உலகில், திரு அவையின் அடிப்படைப் பண்புகளை இறை விசுவாசமுள்ள நம்பிக்கையாளர்கள் முன்னெடுக்க வேண்டும்.

'சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்' என்று இயேசு கூறியதன் அர்த்தம் தற்போதுதான் பொருத்தமாக அமைகின்றது. உலகத்தில் இன்று மாற்றம் கண்டு வருகின்ற அரசியல் - பொருளாதாரக் காரணிகள் மாத்திரமல்ல, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் அதன் மூலம் உருவாக்கப்படுகின்ற நோய்களும் குறிப்பாக உளநோய்களும் சிறுவர்களை வெகுவாகப் பாதிக்கின்றன. பல சிறுவர்கள் தனிமைப் படுகின்றனர்.

ஆகவே சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் என்று இயேசு கூறிய இறைவார்த்தை தீர்க்கதிரிசனம் மிக்கது என்பதைத் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இறை விசுவாசமுள்ள நம்பிக்கையாளர்கள் மத்தியில் மறைபரப்புச் செய்ய வேண்டும்.

வளர்ச்சி என்றும் சமூக மாற்றம் எனவும் கூறிக் கொண்டு ஜனரஞ்சகம் என்ற போர்வையில் இறை விசுவாசத்துக்கு எதிரான கருத்துக்கள் வேகமாகப் பரவிவரும் பின்னணியில் இயேசுவின் போதனகளை சமகால உலகத்துக்கு ஏற்ப எடுத்துக் கூற வேண்டியதோடு வாழ்ந்துகாட்ட வேண்டிய அவசியமும் இறைவிசுவாசமுள்ள நம்பிக்கையாளர்களின் பொறுப்பும் கடமையும் என்பதையே கிறிஸ்து பிறப்பு விழா சுட்டிக்காட்டுகின்றது.

2023 ஆம் ஆண்டை யாழ் திரு அவை கூட்டு ஒருங்கியக்க ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ள நிலையில், பல்வேறு நிலைகளில் மாற்றங்களையும் புதுப்பித்தல்களையும் ஏற்படுத்தி இறை பாலக இயேசு கொணரும் நீதியோடும், அன்போடும் கொண்ட அமைதியான வாழ்வை புத்தாண்டில் ஆசித்து நிற்போம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## கிறிஸ்து பிறப்பு காலத்தில் இயேசுவை தீவனத்தொட்டியில் சந்திப்போம்

### இலங்கை ஆயர்கள் பேரவை

நாங்கள் மீண்டும் கிறிஸ்து பிறப்புக் காலத்தின் வாசலில் நிற்கின்றோம். எனவே, “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக் உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” என இறைதூதர்கள் பாடிய பாடலைப் தியானிக்க நாம் அழைக்கப்படுகிறோம். (லூக்கா 2:14). உண்மையில், கிறிஸ்து பிறப்பு கடவுள் மனிதகுலத்தை எவ்வளவு நேசிக்கிறார் என்பதையும், அவர் நமக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. எனவே நம்மைக் மீட்பதற்காக அவர் நம்மிடையே பிறக்க திருவுளம் கொண்ட அந்த அன்பின் செயலை கிறிஸ்து பிறப்பு விழா வெளிப்படுத்துகின்றது.

மேலும் அவர் வறுமையில் பிறக்கத் திருவுளமானார். எனவே கிறிஸ்துவின் பிறப்பானது, தாழ்நிலை தீவனத்தொட்டியில் நிகழ்ந்த ஓர் பிறப்பாகும். இப் புனித பிறப்பு நமக்கு முன்வைக்கும் சவால்களை ஆழமாக பிரதிபலிக்க முடியாது. கடவுள் நம் மனித இயல்புக்கு முடிந்தவரை நெருக்கமாக இருக்க விரும்பினார்: இம்மானுவேல் - கடவுள் நம்முடன். கிறிஸ்து பிறப்பு மூலம் நாம் தனியாக இல்லை என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். கடவுள் ஏழைகளில் மனிதனாக மாறுகறார், அவர்களில் ஒருவராகிறார், ஆகவே தான் தாழ்நிலைத் தீவனத்தொட்டியில் அவர் பிறந்தார். இவ்வாறு கிறிஸ்து பிறப்பின் அழைப்பானது, இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய அந்த தாழ்நிலை தீவனத்தொட்டிக்குச் செல்லும் அழைப்பாகும்.

எனவே, ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பிலும் நாம் அந்தத் தீவனத்தொட்டிக்குச் சென்று ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் அவநம்பிக்கையானவர்களிடம் அவரைத் தேட வேண்டும். குறிப்பாக இது போன்ற நேரத்தில் நம் நாட்டைப் பீடித்துள்ள பயங்கரமான பொருளாதார நெருக்கடியில், வாழ்வதற்கே போராடிக்கொண்டிருக்கும் ஏழைகளின் நிலை நம்மைத் தொட வேண்டும். ஏழைகளுடன் எம்மை அடையாளப் படுத்தி அவர்களில் பெத்லகேமில் பிறந்த குழந்தையை கண்டுகொள்வதை விட சிறந்த கிறிஸ்து பிறப்பு விழா எதுவுமில்லை.

எனவே, ஆண்டவரின் வருகையை நம்மிடையே கொண்டாடத்தயாராகும் வேளையில், வறுமையில் வாடும் மற்றும் விரும்பி, உழைத்துச் சேமித்த பணத்தை வீணடித்து, இவ் நிகழ்வை வெறும் வெளிக் கொண்டாட்டங்களாக கொண்டாடுவதை தவிர்க்குமாறும், நமது இறை நம்பிக்கையாளர்களை வலியுறுத்துகிறோம்.

ஏழை எளியோருக்கு உலர் உணவுகள், குழந்தைகளுக்கு பால் உணவு மற்றும் மருந்து போன்றவற்றுக்கு உதவுவதற்காக இத்தகைய செலவுகள் அனைத்தும் ஒதுக்கப்பட வேண்டும். வெளிப்புற ஆடம்பரங்களில் புலன்களை செலுத்தாது கிறிஸ்து பிறப்பு விழாவின் ஆன்மீக செய்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

அமைதியின் அரசராகிய இயேசுவிடம் நம் தேசம் அமைதியுடன் வாழ மன்றாடுவோம். இவ் கிறிஸ்து பிறப்பு விழாக் காலம் எம் நாட்டை குணப்படுத்தும் காலமாக இருக்கட்டும்! இவ் கிறிஸ்து பிறப்பு நம் மண்ணின் ஏழைகளுக்கும், துன்பப்படும் மக்களுக்கும் ஆறுதல் அளிக்கட்டும்! ஏழைகளில் பாலக இயேசுவைச் சந்திக்க எல்லா இதயங்களும் எழுச்சி பெறட்டும்!

### சிந்திக்க ஒரு சித்திரம்





## பாராட்டி வாழ்த்துகின்றோம்
## நாவாய் புனித நீக்கிலார் பதி வாழும்


Mr.V.Nishanth LL.B (Hons) (UK) Attorney -At-Law


Mrs. N.Lakshi B.A.(Hons) (University of Jaffna)


Mas.A.J.Jerom (St.Patricks College)

01.11.2022 அன்று (**இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் உயர் நீதி மன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம்**) செய்து கொண்ட திரு.வசந்தராசன் நிசாந் (St.Patricks College -2010th Batch - Maths) அவர்களையும், 07.10.2022 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36வது பட்டமளிப்பு விழாவில் **புவியியல்த் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப்** பெற்றுக்கொண்ட திருமதி லக்ஷி நிசாந் அவர்களையும், 2019 இல் யோர்தான் நாட்டில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இலங்கைத் தேசிய அணியின் 16 வயதுப் பிரிவிலும், 2022 இல் இந்தியா, மொங்கோலியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இலங்கைத் தேசிய அணியின் 20 வயதுப் பிரிவிலும், விளையாடி சாதனை படைத்து கல்லூரிக்கும், நாவாய் மண்ணுக்கும் பெருமை சேர்த்த செல்வன் அன்ரன் ஜெறாட் ஜெறோம் அவர்களையம் பாராட்டி மகிழும் இவ்வேளை, இவர்கள் மேலும் பல சாதனைகள் புரிந்து கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து சமூக நீதிக்காக உழைத்து உயரிய சமூகப் பணி புரிந்திட ஆயராம் புனித நீக்கிலாரின் பரிந்துரை வழியாக இறையருள் எப்போதும் கிடைக்கவேண்டுமெனச் செபித்து மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

AD-84

*இல.256 A, காரைநகர் வீதி,*
*நாவாந்துறை, யாழ்ப்பாணம்.*

*அன்புடன் வாழ்த்தும்*
*மாமாமார்களும், அன்ரியும்*

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# மகிழ்ச்சியின் விடியலை நோக்கி

அருட் தந்தை ஜீவா போல் அமதி

*“அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்க ளுக்கு அறிவிக்கிறேன்”* என்ற வானதூதரின் செய்தி அச்சமும் கவலையும் தோய்ந்த இக்காலத் தில் பெரும் மகிழ்ச்சி என்பது ஒரு பகற்கனவாகவே தோன்றுகிறது.

பணத்துடனும் அதிகாரத்துடனும் வாழத் துடிப்போருக்கு மகிழ்ச்சியானது நீரில் தோன்றும் குமிழ்கள் போல நிரந்தரமற்றவை. அவற்றைத் தக்க வைப்பதற்கு அவர்கள் அனுபவிக்கும் சஞ்சலங்கள்தான் எத்தனை!

**உலகளாவிய துன்பியல்**

உலக சமுதாயம் இன்று பிளவுபடுவதும், கூட்டுச்சேர்வதும், ஒன்றை ஒன்று அடக்கி ஆழ்வ தற்காக தமது நாடுகளினதும் பாதுகாப்பு என்று



காரணம் காட்டி படைப்பலத்தை அதிகரிப்பதும், நவீனரக ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் பெரும் வீரதீரச் செயல் என்று நினைக்கிறார்கள்.

எமது நாட்டிலும் ஊழல் மலிந்து, நான்கு பரம் பரைக்கும் சொத்துக்களை சேமிப்பதிலும், குறுக்கு வழிகளில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டுவதி லும் சிலர் மோகம் கொண்டுள்ளனர்.

**குடும்ப உறவுகளின் சிதைவுகள்**

குடும்பங்கள் மத்தியில் அச்சமும் கவலை யும் பயிருடன் கூடவே களைகள் முளைப்பது போன்று நாளும் பொழுதும் பெருகிக் கொண்டு வருகின்றன. குடும்ப உறவில் கடந்த காலத்தில் இருந்த மகிழ்ச்சி குன்றிப் போகின்றன. இதற்குக் காரணம் தான் என்ன? ஒருவர் மற்றவரில் சந்தேகம் கொள்ளுவதும், நான் என்ற பிடிவாத மும் விட்டுக் கொடுத்தலுக்குப் பதிலாகக் கயிறு இழுத்தல் போட்டி நடைபெறுவதே காரணங்க ளாகும். மனிதர்களை மனிதர்களாக மதிப்பதில்லை. அன்பு, புரிந்துணர்வு நாட்கள் செல்லச் செல்ல அருகிக் கொண்டு வருகின்றன. சுற்றுச் சூழல்களும்,சுற்ற மும் சொந்தங்களும், எல்லாமே எமக்கு எதிரிகளாகின்றன. அதனால் குடும்ப வாழ்விலும் துணையின்றித் தனிமை வாட்டுகின்றது.

**மனங்கள் மாறவேண்டும்**

அருட்பணி றொன் றொல்கஸ்சர் (Ron Rolheisar OMI) பிரபல்ய ஆன்மீக உரையாளரும், கட்டுரையாளரு மானவர் ‘அமைதிக்காக போராடுதல்’ என்ற தலைப்பில் பின்வருமாறு கூறினார். ‘உறவுகள் முறிந்து வன்முறை கள் நிலவும்போது உலக அரசுகள் நடுவே வன்முறை யற்ற உறவுகள் நிலவ வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது’.

‘நம் வாழ்வில் ஏற்பட்ட பழைய காயங்களை மன்னித்து முன்னோக்கிச் செல்ல மனமில்லாதபோது நாடுகளிடையே இனங்களிடையே உருவான வரலாற் றுக் காயங்களை மறந்து அரசுத் தலைவர்கள் முன் னோக்கிச் செல்ல வேண்டும் என்று எதிர்பர்க்கக்கூடாது’.

எனவே மகிழ்ச்சிக்கான வழிகளை எமக்குள்ளே நிகழ வேண்டிய உளமாற்றங்கள் ஊடாக உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

**இயேசு கொணர்ந்த மகிழ்வு**

லூக்கா நற்செய்தியாளர் தமது நற்செய்தியில் மக்கள் மனங்களில் பிறந்த மகிழ்ச்சி உணர்வுகளை ஒவ்வொரு பக்கங்களிலும் எடுத்தியம்புகிறன்றார்.

- ❑ கிறிஸ்து தம் தாய்வயிற்றில் கருவாக உருவாகும் செய்தியை அறிவித்த நிமிடத்திலேயே மரியாள் அருள் மிகப் பெற்றவளாக வாழ்த்தப்படுகிறார். மரியாள் தொடர்ந்தும் ‘என் ஆன்மா ஆண்டவரைப் போற்று கின்றது’ என்று பாடுகின்றார்.
- ❑ எலிசபெத்து தம் முதிர்ந்த வயதில் இறைவனது இரக்கத்தை நினைந்து கழிகூருகின்றார்.
- ❑ விண்ணகத் தூதர் மகிழ்ந்து கடவுளுக்கு மாட்சி என்று குரல் ஒலித்தனர்.
- ❑ இயேசுவின் போதனைகளைக் கேட்ட மக்கள் யாவரும் வியந்து பாராட்டினர்.
- ❑ ஏழையர், நோயுற்றோர், பார்வை இழந்தோர், கால் ஊனமுற்றோர், தொழுநோயாளர், ஒடுக்கப்பட் டோர் அனைவரும் குணமும் ஆறுதலும் பெற்று கடவுளைப் புகழ்ந்தனர்.
- ❑ பேய்பிடித்து அலக்களிக்கப்பட்டவர்கள் பலர் தொல் லைகள் நீங்கி அமைதியைக் கண்டு வியந்தனர்.
- ❑ பாவ நோயால் கண்டுண்ண பலர் தம் வாழ்வின் விடியலைக் கண்டு மகிழ்ந்தனர்.
- ❑ வரி தண்டுவோரும் பாவியரும் பெண்களும் இயேசுவோடு பந்தியில் அமர்ந்து கொண்டாடினர்.

இவ்வாறு சூரிய உதயத்தைக் காணும் பூக்கள் மலருவதுபோல மனித மனங்களும் இயேசுவைக் கண்டு உளம் மலர்ந்தன.

தம் வாழ்வில் இயேசுவோடு கொண்ட ஆழ்ந்த அன்பில் முதிர்ச்சி கண்ட பவுல் அடிகளார் ‘ஆண்டவ ரோடு இணைந்து என்றும் மகிழுங்கள். மீண்டும் கூறுகிறேன் மகிழுங்கள்’ (பிலி 4:4)

எனவே இறைமகன் இயேசுவை சந்திப்ப தால் மட்டுமே ஒவ்வொரு ஆன்மாவும் குடும்பங்களும் மனித சமூகமுமே மகிழ்ச்சியின் விடியலை காண முடியும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நற்செய்தி யின் மகிழ்வு (Evangelii Gaudium) என்னும் திருத் தூது மடலில் கிறிஸ்தவர்கள் மகிழ்வின் நற்செய்தி தூதுவர்களாக விளங்க வேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றார்.

நிரந்தர மகிழ்வை பிறப்பிக்கக் கூடிய கிறிஸ் துவை சந்திப்பதன் ஊடாக மனித உள்ளங்கள் தனித்தும் கூட்டாகவும் தம் வாழ்வில் மகிழ்வை அனுபவிக்க முடியும். அத்தகைய உள மகிழ்வை தம் உறவுகளோடும் பகிர்ந்துகொள்ள அவர்கள் தகமை பெற்றவராவர்.

***அச்சமும் கவலையும் தோய்ந்த வாழ்வில்***
***கிறிஸ்துவின் பிறப்பு***
***மகிழ்ச்சியின் விடியலாக பாரெங்கும் பரவட்டும்.***

# போதையற்ற மகிழ்வியல்




அருட்தந்தை டே.வின்சன் பற்றிக், அ.ம.தி.

இன்று என்றும் இல்லாதவாறு போதைப்பொருட் பாவனை எமது இளையோரை, மாணவர்களை பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றது. அதிகூடிய இலாபம் பெறும் நோக்கோடு போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவோர் மனிதத்தை நேசிக்காது, மனித மாண்பிற்குக் குந்தகம் விளைவிக்கின்றனர்.

1. பாவனை அதிகரிப்பதற்கான காரணிகள்
2. பலதரப்பட்ட பாதிப்புகள்
3. சிகிச்சை வழிமுறைகள்
4. நேர்விளைவுகள்

**1. பாவனை அதிகரிப்பதற்கான காரணிகள்:**

அ. தவறான போலி நட்புக்கள்
ஆ. பெற்றோரின் பொறுப்புக் குறைவு
இ. வியாபாரிகளின் தந்திரமான வலைப்பின்னல்
ஈ. உலக போக்கு அதிகரித்தல்
உ. ஆன்மீக நாட்டக் குறைவு
ஊ. தவறான தொடர்பாடல்

**2. பலதரப்பட்ட பாதிப்புகள்:**

அ. உடல்ரீதியான பாதிப்புக்கள்

நடுக்கம், இடுப்புவலி, நித்திரைக்குறைவு, மறதி, இனப்பெருக்க ஆற்றல் குறைவு, குடற்புண்,

ஆ. உளரீதியான பாதிப்புக்கள்

பிடிவாதம், பதகழிப்பு, மனச்சோர்வு, கோபம், கடுப்பு, கொதிப்பு, சந்தேகம், தங்கியிருத்தல், தாயி- னைக் கொடுமைப் படுத்தல், மனப் பாதிப்பு.

இ. சமூக ரீதியான பாதிப்புக்கள்

ஒதுங்குதல், சீரான உறவின்மை, சட்டங்களை முறிய டித்தல், நடத்தைப் பிறழ்வு, வன்முறையான தொடர் பாடல், இதய வலியினைத் தனக்கும் பிறருக்கும் தோற்றுவித்தல்.

ஈ. ஆன்மீக ரீதியான பாதிப்புக்கள்

இறை நம்பிக்கையீனம், கோவில் கிருத்தியங்களில் ஆர்வ மின்மை, அடாவடித்தனம், உலகியல்போக்கு

**3. சிகிச்சை வழிமுறைகள்**

மருத்துவ ஆலோசனை பெற்று மருந்து வழங்கல், உள மருத்துவம்,உளம்சார் நிபுணர்களின் வழிகாட்டல், தனியாள், குழு, குடும்ப ஆற்றுப்படுத்தல், சமச்சீரான சூழலில் வாழவைத்தல், தொழில் வழிகாட்டல், ஆன்மீக வழிகாட்டல்.

**4. நேர்விளைவுகள்**

நேர் சிந்தனையில் வாழுதல், ஒருமுகப்படுத் திய சிந்தனை ஏற்றம், சீரான உறவு வெளிப்பாடு, கனிவான, கரிசனையான உணர்வு வெளிப்பாடு, மகிழ்வோடு வாழுதல், வன்முறையற்ற தொடர்பாடல், இயல்பான அழகு இரசனை, உடலாலும் உள்ளத்தாலும் வலிமையாக இருத்தல், நிபந்தனையில்லா அன்பில் வளர்ந்து, ஆக்கபூர்வமான சமூகத்தைத் தோற்று வித்தல். எனவே,

➪ பொறுமையோடும் நம்பிக்கையோடும் இருங்கள். உங்களது இதயத்திற்குள் ஆழமாய், படிப்படியாக நகருங்கள். உங்களது அடியில் ஓடுகின்ற ஆறு இருக்கின்றது. அந்த இடம் உங்களை பயமுறுத்து கின்றது. எனினும் அஞ்ச வேண்டாம். ஒரு நாள் அது அமைதியடையும்.


➪ விசுவாசமுள்ள, கட்டுப்பாடுள்ள வாழ்வை, உள் ளக சக்தி தரும் வாழ்வை, அன்பைப் பெறும் வாழ்வை வாழ்ந்து காட்டுங்கள்.

➪ உண்மையான அன்பு கிடைக்கும்போதெல்லாம் அதனை எடுத்து, வலி துடையுங்கள். நீங்கள் அன்பு செய்யப்படுவதை உங்களது உடல், உள்ளம், இதயம் அறிகின்றபொழுது உங்களது மோசமான பகுதி அந்த அன்பினால் கவரப்படும். பிரிக்கப்பட்டு அடையமுடி யாதது எனப்பட்டது பெறப்படும் அன்பினால் கவரப்படும். ஒருநாள் உங்களது வேதனை போய் விட்டது என்பதை உணர்வீர்கள். உங்களது பலவீனமான ஆளுமைப் பகுதி அன்பினால் ஆட்கொள்ளப்பட அந்த வேதனை போய்விடும்.

➪ நீங்கள் அங்கில்லை. நீங்கள் வேகமாக அசைகிறீர்கள். நோவுப் போராட்டமும் சிறிது தொடர லாம். அதனை எதிர் கொள்ளத் தயாராய் இருங்கள். நேராகத் தொடர்ந்து நடவுங் கள். உங்களது வேதனையை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களது கட்டுப்பாட்டிற்குள் இருந்து உங்களை அது இழுத்து விடலாம் தடுங்கள். *(தொடர்ச்சி 13ம் பக்)*

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## இன்றைய உலகில் கிறிஸ்து பிறப்பு



மனுக்குல மீட்பராம் இயேசுக் கிறிஸ்து விண்ணகத் தந்தையின் ஏக மைந்தன் வான் வீட்டைத் துறந்து மானுடவேடம் தாங்கி, ஏழ்மையின் வடிவமெடுத்து இந்த மண்ணில் அவதரித்தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பலஸ்தீனம் தேசத்தில் நடந்த ஒரு வரலாற்று நிகழ்வு இது. அகிலம் முழுவதும் அக்களித்துக் கொண்டாடும் கிறிஸ்தோதயப் பெருவிழா. உலகின் பல்வேறு நாடுகளில் சமகாலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளுடன் சிந்தனைக் கண்ணோட்டத்தில் உற்று நோக்கப் படுவது காலத்தின் தேவையாகும்.

உலகின் வெவ்வேறு நாடுகளில் அகதிகள் என்று பெயர் சூட்டப்பட்டு பல்வேறு காரணங்களால் அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்தின் ஒரு பகுதி மக்களுக்கு இறைமகன் இயேசுவின் வாழ்க்கை ஆறுதல் தரும் ஒரு முன்னோடி வாழ்க்கையாக அமைந்திருக்கின்றது.வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது அன்று இயேசுவும் ஒரு அகதியே. காலக் கண்ணோட்டத்தில் உற்று நோக்கினால் அது புரியும்.

உரோமைப் பேரரசின் இராஜாவான அகஸ்து சீசர் காலத்தில் உலகெங்கும் குடிசன மதிப்பீடு எடுக்கப் பட்டது. பலஸ்தீன தேசம் உரோமைப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்த காலம் அது. தாவீது அரசகுலத்தவரான மரியாளும் சூசையும் நாசரேத்து ஊரில் வாழ்ந்து கொண்டிருந்தனர். தாவீதின் நகரான பெத்லகேமில் இயேசு பிறப்பாரென்று அவரதுபிறப்பைப் பற்றி இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்திருந்தார் மகப்பேற்றை எதிர்பார்த்துக் காத்திருந்த நிறைமாதக் கற்பவதியான மரியாவை அழைத்துக்கொண்டு நசரேத்திலிருந்து 60 மைல் தொலைவிலிருந்த பெத்லகேம் என்ற ஊருக்குக் கால்நடையாகப் பயணமாகினர்.

வாகன வசதிகளற்ற காலம் அது. அந்த நெடுந் தொலைவுப் பயணத்தை நோக்கின் அகதிகளாக இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் சென்ற நமது மக்களில் பெரும்பாலானோர்பட்ட கஷ்டங்களும் துயரங்களும், இன்னல்களும் அன்று மரியாளுக்கும் சூசைக்கும் ஏற்பட்டிருக்கும் என்பதற்கு ஐயமில்லை. கற்பவதியான ஒரு இளம் மனைவியை அழைத்துக் கொண்டு பரபரப்பான பாதுகாப்பற்ற, பயங்கரமான சூழ்நிலையில் இடம்பெயர்ந்து சென்ற பல இளம் கணவர்மார்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் சூசைக்கு ஏற்பட்டிருக்கலாம் அல்லவா. நோயுற்று வருந்துவோர் வயோதிபர், காயமடைந்தோர் இவ்வாறான அவலங்களை எவ்வாறு அனுபவித்தனர் என்பதை எண்ணிப் பார்க்கலாம்.

எப்படியோ பெத்லகேம் வந்து விட்ட மரியாளுக்கும், சூசைக்கும் வீடு தேடும் படலம் ஆரம்பமாகிவிட்டது. எங்கும் சனங்கள் நிரம்பி வழிந்தனர். சென்ற வீடுகளெல்லாம் இடமில்லை, இடமில்லை என்ற பேச்சுத்தான் ஒலித்தது. சத்திரத்தில் கூட இடமில்லை. இறுதியில் நகரின் ஒதுக்குப்புறத்தில் மாட்டுக்கொண்டிலே அவர்களை வரவேற்றது. இடம்பெயர்ந்த மக்களில் வசதி படைத்தோர் செல்வாக்குடையோர் நண்பர்கள், சொந்தபந்த உறவினர் வீடுகளில் எப்படியோ இடம் பிடித்தனர். முதியவர்களுக்கு பாடசாலைகளும், பொதுக் கட்டடங்களும் கைகொடுத்தன. ஆனால் நூற்றுக்கணக்கான ஏழைகள் வீதியோரங்களில், மர நிழல்களில் தங்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எவரும் உதவிக்கில்லாத நிலையில் மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்தாள். நடுநிசியில் நடுங்கும் குளிரில் குழந்தை இயேசுவைக் கந்தையில் பொதிந்து, வைக்கோல் அணையில் அன்னைமரி வளர்த்தியிருந்தாள். தாவீது அரச பரம்பரையில் உதித்த இறைமகனாம் இயேசுவுக்கு இந்த ஏழ்மைக்கோலம் மாடமாளிகை, பட்டுப் போர்வை, பஞ்சணை மெத்தை, தங்கத் தொட்டில் எல்லாம் எட்டாத காரியமா? இல்லவேயில்லை.

சுகாதார வசதிகளற்ற மிருக வாடையும், மிருகங்களின் கழிவுகளின் நெடிலும் வீசும் அந்தச் சூழ்நிலையை எண்ணிப் பார்ப்போம். அகதி முகாம்களின் அவல நிலையும், அடிப்படை வசதிகளே இன்றி இன்னல்களைச் சுமந்து வரும் எண்ணற்ற மக்களின் நிலையும் இவ்வாறு தான் என்பது சொல்லாமலே புரியும். மருத்துவ வசதிகள், மருத்துவமாதுகளின் உதவிகள், அனுபவமிக்க எந்தத் தாயின் உதவியுமே இல்லாது, பிரசவிக்கும் தாய்மாரின் துன்பங்களை அன்னை மரியாள் அனுபவித் திருப்பாள். இன்றைய கால நிகழ்வுகளோடும் அதன் தாக்கங்களையும் அன்று திருக்குடும்பம் அனுபவித்து வாழ்ந்தமை நமக்கு எடுத்துக் காட்டாகும்.

பாலகன் இயேசுவின் பிறப்பு மிக எளிமையானதாகும். இன்றைய உலக மாயக் களியாட்டங்கள், ஒரு பால் திருமணம், விவாகரத்து, திருமணம் செய்யாது கூடி வாழ்தல் என்று கிறிஸ்து பிறப்பின் விழுமியங்களை இழந்த எம்மிடையே கிறிஸ்து அர்த்தமுள்ளதாகப் பிறக்கவும், விடுதலையும் சமாதானமும் மட்டுமல்ல, பாவத்தின் அடிமையில் வாழ்வோர் விடுதலை பெறவும், ஏழைகள், புறந்தள்ளப்பட்டு வாழ்வைத் தொலைத்தோர், மறுவாழ்வு பெற்ற அனைவரும் ஒன்று பட்டு வாழ்ந்து, அவரது அமைதியை எம்மில் அனுபவித்து, கிறிஸ்து பிறப்பின் மகிழ்வில் நாமும் மகிழ்ந்திருப்போம்.

சத்தியசீலன் டெமின்றில்டா
சக்கோட்டை

## மனிதம் வாழ எம்மைப் பகிர்வோம் என்றால் என்ன?

துன்பத்தைத் தூக்கி தோளில் சுமப்பதா இல்லை, இரத்தம் சிந்துவதா இல்லை, நம் பெயரைத்தான் கெடுக்க வேண்டுமென்பதா இல்லை இல்லவே இல்லை.

கொஞ்சம் விட்டுக்கொடுப்பு, உண்மையான அன்பு, நீதியான ஆட்சி இதுவே உண்மையான பகிர்வு.

எந்த விடயத்திலேயாவது நான் விட்டுக் கொடுப்பேன் என எவர்தான் முன்வருகின்றனர். பிள்ளையின் நல் வளர்ச்சி என்னைப் பார்த்து கெட்டுவிடும் என எண்ணி தாய் தொலைக் காட்சியை அல்லது தொலைக்காட்சித் தொடர் நாடகங்களை விட்டுக் கொடுக்கின்றனரா? என் மகன் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும் என எண்ணித் தந்தை குடியை, புகைபிடிப்பை, சூதாட்டத்தை விட்டுக்கொடுக்க முடிந்ததா?

நண்பன் நண்பனுக்காக, நண்பி நண்பிக்காக, அயலவர்கள் அயலவர்களுக்காக எதைத்தான் விட்டுக் கொடுக்க முடிந்தது. விட்டுக் கொடுப்பதற்கு முதலில் அன்பு இருக்கவேண்டும். உண்மையான அன்பு ஒருபோதும் தீமையை விரும்பாது. அன்புப் பகிர்வே சிறந்த பகிர்வாகும்.

தன் நண்பன் ஒருவன் போதைக்கு அடிமையாகின்றான் என்று கண்டால் அவனைத் தட்டிக்கொடுத்து, தானும் அதில் பங்கு கொள்வதல்ல பகிர்வு. நீ பாவத்தில் மூழ்கி அழிந்து போகின்றாய் இதிலிருந்து விலகு, நீ வாழ வேண்டியவன் என அவன் வாழ்வை மாற்றுவது உண்மையான அன்புப் பகிர்வு.

தொழில் வீழ்ச்சி, உழைப்பின்மை, ஒருவர் வீட்டில் பஞ்சம், பசி, பட்டினி என அறிந்து ஓடோடிச் சென்று இதை உண்டு குடியென இருக்கின்றவர்கள் இல்லாதவரோடு கொடுத்து உதவுவது நற்செயல் பகிர்வு. நோயில் வாடுகின்றேன் உதவ யாருமில்லை, தனிமையில் தவிக்கின்றேன் எனக்கென எவருமில்லையென வாடுபவர் குரலுக்கு இதோ நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆறுதலாய் இருப்பேன் எனக்

# பகிர்வு



கூறி கைகொடுப்பது நல்லுறவுப் பகிர்வு.

இப்படி எத்தனை பேர்தான் வாழ்கின்றோம்? எவருமில்லையே. பகிரவேண்டிய ஆட்சியாளர்கள் பறிக்கின்றனர். காக்க வேண்டியவர்கள் களவாடுகின்றனர். அணைக்க வேண்டியவர்கள் அலற விடுகின்றனர். கொடுக்கின்றவன், காக்கின்றவன், அணைக்கின்றவன் எவனோ பகிர்கின்றவனும் அவனே ஆவான். அவ்வாறு நான் இருக்கின்றேனா என எண்ணிப் பார்ப்போம். இவ்வாறு இல்லை என்றால் இப்படிப்பட்ட மனம் தாரும் என்று இறைவனிடம் வேண்டுவோம். இதற்காகத் தான் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது.

பேரொளியாம், பெரும் சுடராய், விண்மீன்கள் ஒளிர்ந்திட, வானவர் கீதம் பாட விண்ணிலிருந்து இறை மைந்தன் மண்ணில் உதித்தார். நமக்காக, இறை மாண்பை விட்டுக்கொடுத்து, மனிதனாக வாழ்ந்தார் நமக்காக, ஆண்டவரும் குருவுமாகிய நான் இதைச் செய்கின்றேன் என்றால் நீங்களும் உங்களுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு இதைச் செய்யுங்கள் என்று நல்லாட்சிப் பகிர்வை வெளிப் படுத்தியது நமக்காக.

உன்னை நான் அன்பு செய்கின்றேன். முழுமையாக அன்பு செய்கின்றேன். அதுவும் உன் பாவங்களை என் தோளில் சுமந்து உனக்காக அவமானப்பட்டு இரத்தம் சிந்தி, உயிரைக் கொடுத்தது உனக்காக, அன்று இறை யேசு உயிரை விட்டதும் நமக்காக. அவர் நம்மிடம் கேட்பது உண்மை அன்பு, நீதி, நேர்மை, இரக்கம்கொண்டு ஒருவர் ஒருவருக்காக பகிர்ந்து வாழவேண்டும் என்பதே ஆகும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாமெல்லோரும் பாலன் இயேசுவின் வாழ்வை நம் வாழ்வாக மாற்றி அமைப்போம். அவர் காட்டிய வழியே நம் இறுதி வாழ்வின் ஒளி. இல்லையென்றால் நம் இறுதி வாழ்வு இருளாகிவிடும். ஆகவே நாமும் இன்பமாய் வாழ்ந்து எம்மால் மனிதம் முழுவதும் இன்பமாய் வாழ நம்மையே நாம் பகிர்வோம்.

ஜெ. நிலக்சன்
பருத்தித்துறை

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# புத்தாண்டில் அரசியல் மாற்றம்

அ.நிக்ஸன்

பிறக்கப்போகும் புத்தாண்டில் இலங்கைத்தீவில் அரசியல் - பொருளாதார மாற்றங்களுக்கு இடமுண்டு என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. ஆனால் இந்த அணுகுமுறைகள் எழுபது வருட ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளக்கூடிய சில ஏற்பாடுகளை முடிந்தவரை சாதகமாக்கும் முயற்சிகள் தீவிரமடைகின்றன.

> “தற்போது நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் இலங்கையர்கள் என்ற அடையாளத்துடன் ஈழத்தமிழர்கள் வாழ வேண்டுமென்ற தொனி வலுவாகத் தென்படுகின்றது”

இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் கொள்கையைத் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாளுகிறார் என்பதைவிட, சிங்கள ஆட்சியாளர்களின் கொள்கைதான் அது என்பதை இடதுசாரி என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் ஜே.வி.பி நிரூபித்து வருகிறது.

இந்த டிசம்பர் மாதம் கொழும்பில் ஜே.வி.பி தமிழ் மக்களுடன் நடத்திய சந்திப்பில் அது வெளிப்பட்டுள்ளது. இது பௌத்த சிங்கள நாடு என்பதுதான் ஜே.விபியின் கொள்கை. அதன் உறுப்பினர்களுடைய நாடாளுமன்ற உரைகளில் இருந்து இக்கொள்கை ஏற்கனவே வெளிப்பட்டுள்ள நிலையில், குறித்த சந்திப்பின் மூலம் மேலும் அது பட்டவர்த்தனமாகியுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் இந்தியா மூலம் ஈழத்தமிழர்கள் பெற்றுக்கொண்டது என்பதைத் தாம் ஏற்றுக்கொள்வதாகக் கூறிய ஜே.வி.பி தலைவர் அனுரகுமர திஸாநாயக்கா, தனிப்பட்ட முறையில் 13 ஐ தான் நிராகரிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஆனால் வடக்குக் கிழக்கு இணைந்த அரசியல் தீர்வுக்கோ அல்லது இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலோ அனுரகுமார திஸாநாயக்க தெளிவுடன் இல்லை என்று சந்திப்பில் பங்குபற்றிய தமிழ்ச் செய்தியாளர் ஒருவர் கூறினார்.

அத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் அல்லது இலங்கையர்கள் என்ற அடையாளத்துடன் ஈழத்தமிழர்கள் வாழ வேண்டுமென்ற தொனியும் வலுவாகத் தென்பட்டது என்றும் அந்தச் செய்தியாளர் கூறியிருக்கிறார்.

2006 இல் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவுடன் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து வடக்குக் கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரித்தவர்கள்தான் இந்த ஜே.வி.பி. ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் உருவாகியுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலை என்பதைத் தமக்குச் சாதகமாக்கினாலும், தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பது ஜே.வி.பிக்கு நன்கு தெரியும்.

ஆனால் தமது ஆசனங்களை அதிகரித்துப் பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகளில் ஏதேனும் ஒன்று ஆட்சி அமைக்கும்போது ஆதரவு கொடுத்து ஆட்சியில் பங்கெடுக்கவும் ஜே.வி.பி விரும்புகின்றது.

அப்படி இல்லையேல் பலமான எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும் என்ற விருப்பமும் ஜே.வி.பியிடம் உண்டு. அதற்கேற்பவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வுகளும் அமைந்திருக்கின்றன.



குறிப்பாக சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைப் பலவீனமாக்கிப் பலமான எதிர்க்கட்சி இல்லாத அரசியல் சூழல் ஒன்றை உருவாக்க ரணில் முற்படுகின்றார். ஜே.வி.பியை ஒருபோதும் தனது அணிக்குள் அல்லது தனது அரசாங்கத்துடன் குறைந்த பட்சம் ஒத்துழைத்துச் செயற்பட ஜே.வி.பி விரும்பாது என்பது ரணிலுக்குத் தெரியாததல்ல.

ஆகவே சஜித் அணியைத் தனிமைப்படுத்திப் பலவீனமாக்கி அல்லது சஜித் அணியைத் தனது அரசியல் நகர்வுக்குள், அதாவது அன்னம் சின்னத்துக்குள் உள்வாங்கிச் செயற்பட ரணில் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்கள் சில சமயங்களில் வெற்றியளித்தால், அனுர குமார திஸாநாயக்க விரும்புவது போன்று பிரதான எதிர்க்கட்சியாக வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

டளஸ் அழகபெரும தலைமையில் இயங்கும் முன்னாள் பெதுஜனப் பெரமுனக் கட்சி உறுப்பினர்களின் அணி ஆட்சியமைக்கும் அளவுக்கு எந்த ஒரு தேர்தல்களிலும் பெருமளவு ஆசனங்களைப் பெறக்கூடிய நிலைமை இல்லை. ஜே.வி.பி இணைந்து போட்டியிட்டால் கூட அது சாத்தியமாகக் கூடிய தன்மைகள் மிகக் குறைவு.

*சஜித் - டளஸ் கூட்டிணைந்து தேர்தலில் போட்டியிட்டால் கூட வெற்றி சாத்தியமா என்பதும் கேள்விக்குரியதுதான்.*

ஆகவே தற்போது ரணில் மேற்கொண்டு வரும் நகர்வின் பிரகாரம், ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணியை மீளச் செயற்படுத்தி, அதன் அன்னம் சின்னத்தில் ஜே.வி.பி தவிர்ந்த அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கித் தேர்தலில் போட்டியிட எடுக்கும் முயற்சிதான் முன்னிலை வகிக்கிறது என்பது தற்போது கண்கூடு.

அன்னம் சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன உள்ளிட்ட ஏனைய சிறிய சிங்களக் கட்சிகள் குறிப்பாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் இடதுசாரிக் கட்சி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றை இணைக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெறுகின்றன.

அத்துடன் சரத் பொன்சேகா, பாட்டாளி சம்பிக்க ரணவக்க ஆகியோரைக் கூட இணைக்கும் முயற்சியும் உண்டு. அப்படி இவர்கள் இணையாவிட்டால் ரணிலுக்கு அது பெரிய பிரச்சினையாக இருக்கவும் வாய்ப்பில்லை.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ரணிலுடன் மிக நெருக்கமாக செயற்பட்டவர். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தை அமைக்கச் சந்திரிகா முன்நின்று செயற்பட்டுமிருந்தார்.

ஆனால் பொருளாதார நெருக்கடியின் பின்னரான அரசியல் சூழலில் ராஜபக்ச குடும்பத்தின் செல்வாக்கின் பிரகாரம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதால், ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் ஆதரவைத் தவிர்த்துவிட்டுச் செயற்பட முடியாத சிக்கல் உண்டு.

இதனால் சந்திரிகா ரணிலோடு இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புகள் அரிதாகிவிட்டன. அத்துடன் மைத்திரிபால சிறிசேனவுடன் முரண்பட்டுள்ளதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கைப்பற்றவும் முடியாது. அதனால் சந்திரிகா தற்போதைய அரசியல் சூழலில் தீவிர முயற்சி எடுத்தாலும் ரணில் - மகிந்த கூட்டை உடைக்கவே முடியாது.

ரணிலின் மேற்படி நகர்வுக்கு மாற்றீடான காய் நகர்த்தல்களையும் சந்திரிகா முன்னெடுக்க முடியாத அரசியல் பின்னணிகளே அதிகம்.

அத்துடன் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை சந்திரிகாவினால் பலப்படுத்தவும் முடியாது. அப்படியென்றால், டளஸ் தலைமையிலான அணியும் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் பலரும் சஜித் அணியோடு கூட்டுச் சேர வேண்டும். ஆனால் அது இலகுவான காரியம் அல்ல. இந்த அணியோடு ஜே.வி.பியும் கூட்டுச் சேரக் கூடிய வாய்ப்புகள் இல்லை.

ஆகவே இன்று வரைக்கும் ரணில் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்கள் முன்னேறிச் செல்வதையே அவதானிக்க முடியும். இந்த மாத முற்பகுதியில் கொழும்பில் ரணில், மகிந்த மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர். தொடர்ந்து இரண்டு நாட்கள் சந்திப்புகள் இடம்பெற்றிருக்கிறன.

அன்னம் சின்னத்தில் ஐக்கிய தேசிய முன்னணியாகச் செயற்படுவது குறித்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காய் நகர்த்தல்களை மகிந்த ராஜபக்ச இச் சந்திப்பில் ஏற்றிருக்கிறார்.

அத்துடன் ஏனைய சிறிய சிங்களக் கட்சிகள் மற்றும் மலையகத் தமிழ் - முஸ்லிம் கட்சிகள், வடக்குக் கிழக்கில் இருந்து சிங்களக் கட்சிகளுடன் இணைந்து செயற்படும் முன்னாள் ஆயுதக் குழுக்கள் போன்றவற்றையும் இணைக்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் ஆசனம் குறைவடையும் என்ற சமிக்கை தற்போதிருந்தே வெளிப்படுகின்றன. இரு ஆசனங்களில் இருந்து ஒரு ஆசனமாகக் குறையக் கூடிய ஆபத்துக்களே முன்னணிக்கு உண்டு.

அத்துடன் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளின் தமிழ் முகவர்கள் இம்முறை கூடுதல் ஆசனங்களை அல்லது கூட்டமைப்பு - முன்னணி ஆகியவற்றின் வாக்குகளைச் சிதறடிக்கும் அளவுக்குப் பலம் பெற்று வருகின்றனர் என்பதும் தெரிகிறது.

ஆகவே இப் பின்னணியில் மேற்படி ரணில் விக்கிரமசிங்கவின் அன்னம் சின்னத்தில் அனைத்துச் சிங்களக் கட்சிகளும் போட்டியிடுவது என்ற உத்தி வெற்றியளிக்குமானால், ஜே.வி.பி பிரதான எதிர்க்கட்சி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அத்துடன் ஜே.வி.பி பிரதான எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமென ரணில் - சஜித் உள்ளிட்ட அனைத்துச் சிங்கள அரசியல் தலைவர்களும் பௌத்த குருமாரும் விரும்புவர்.

ஏனெனில் சம்பந்தன் அல்லாத சூழலில் வடக்குக் கிழக்குத் தமிழ்க் கட்சிகளிடம் எதிர்க்கட்சிப் பதவி சென்றுவிட்டால், மீண்டுமொரு பிரிவினைவாதம் அல்லது இனப்பிரச்சினை சர்வதேசமயப்படுதல் போன்ற காரணகாரியங்களுக்கு அது வசதியாக அமைந்துவிடும் என்ற ஒரு மிகைப்படுத்தப்பட்ட அச்சம் சிங்களத் தலைவர்களிடம் உண்டு.

ஆகவே இப் பின்புலத்தில் பிரதான எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பு ஜே.வி.பியிடம் செல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகம் எனலாம். இந்த நகர்வுகளை அவதானித்தே, ஜே.வி.பி தமிழ் மக்களை அணைத்துச் செல்வது போன்ற ஒரு அணுகுமுறையைக் கையாள முற்படுகின்றது.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# கிறிஸ்து பிறப்பில் அன்னை மரியாவின் பங்கு



**நா**ம் பல சிறப்பான, அழகான தயாரிப்புகள் செய்தாலும், வாழும் கடவுளின் வார்த்தை எதிர் பாராதவிதத்தில் திடீரென்று வெடித்து எழும். அப்படி எழும்போது, நம்மிடமிருந்து ஒரு சிலவற்றை எதிர் பார்க்கின்றது. அறிவுபூர்வமாகச் சிறந்த நடத்தலில் மட்டுமல்ல. மனித ஆற்றலில் மட்டுமல்ல 'ஆம்' என்று நம்பிக்கையோடு இறைவார்த்தைக்குச் செவிமடுத்து, கீழ்ப்படியும்போதும் இயேசுவின் கீழ்ப்படிதல் போல் (எபி 10:5) கன்னிமரியா திரு அவையைப் போன்ற வராக இருக்கின்றார்.

முதல் பெந்தகோஸ்தேவை லூக்கா 1:35 இல் காண்கின்றோம். அதுபோன்று இயேசுவின் உயிர்ப்புக்குப்பிறகு (திப 1:8,2), மரியா விரைவாகச் செல்கின்றார் என்பதையும் (லூக் 1:39), திருத்தூதர்கள் ஒன்றுகூடியதையும் (யோவா 20:16) இல், (திப 1:13) இல் காண்கின்றோம். தைரியமாகக் கிறித்துவின் நற்செய்தியை அறிவிக்க தாங்கள் கண்டதை கேட்டதை மற்றும் சமாதானத்தைக் கொண்டு செல்கின்றனர். திப 5:20 ஆண்டவரின் உயரியபண்பை திப 4:33 இல் காணுகின்றோம். மரியா எலிச பெத்தைச் சந்தித்தல் மற்றும் எலிசபெத்தைச் சந்தித்த இந்த நிகழ்வு நற்செய்தி அறிவிப்புக்கு முன்னோடியாக திகழ்கின்றது. மரியா கிறிஸ்துவின் நற்செய்தியை ஏழை களுக்கு எடுத்துரைக்கின்றார். வாழ்வு - சாவு (லூக் 3:2 4:1,19) இல் இதைக் காண்கின்றோம்.

இப்படி மரியா இயேசுவின் மனித உடல் எடுத்தலில் ஒன்றாகக் கலந்துள்ளார் என்பது தெளிவாகின்றது. அத்தோடு கொஞ்சம் கவனமாக முக்கியமான நிகழ்வுகளிலும் திருவழிபாட்டு நேரங்களில் கையாளப்படுகின்ற இறைவார்த்தைகளையும் உற்று நோக்கினால் இவைகள் நன்கு விளங்கும். டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி, அமல உற்பவத் திருவிழா, (17-23) நவநாட்களில் வரும் விவிலியக் குறிப்புகள், கிறித்து பிறப்பு, திருக்குடும்பத் திருவிழா, ஆண்டின் முதல் நாள் கடவுளின் தாய், திருக்காட்சி, திருமுழுக்கு-திருப்பெயர கோவிலில் காணிக்கையாக்குதல்.

திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறிலிருந்து டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி வரை, இறுதி காலத்தைப் பற்றிய செய்திகள் இறைவாக்கினர் எசாயா புத்தகத்திலிருந்தும், இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றியும், அதிகமான செய்திகள் நமக்கு கிடைக்கின்றன. மற்றும் 17-லிருந்து 24 வரையுள்ள காலங்களில் அது திரு அவையின் கட்டளை செபமாக இருந்தாலும், விவிலியப் பகுதிகளான வாசகங்களாக இருந்தாலும், கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு நம்மை தயாரிக்க அழைக்கின்றது. இது, கிறித்துவின் இரண்டாம் வருகைக்கு நம்மைத் தயார் செய்வதாகும். இந்தத் தயாரிப்பில் விவிலிய கதாபாத்திரங்கள் மூன்று மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

1. இறைவாக்கினர் எசாயா
2. திருமுழுக்கு யோவான்
3. கன்னி மரியா

**1. இறைவாக்கினர் எசாயா**

எசாயா இறைவாக்கினரின் போதனைக-ளில் எதிர்நோக்கிற்கான எதிரொலிகள் அதி-கம் தெரி கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்கள் அடிமை வாழ்வில் அவர்களுக்கு நம்பிக்கை தருகின்றவராக மனிதருக்கு, எல்லா மனிதருக்கும் எதிர்நோக்கி இருக்கின்றவர்களுக்கும் தீனிபோடுகின்ற வராக இருப்பதை நாம் காணுகின்றோம்.

**தோல்விகளில் எசாயா காட்டும்:**

- விடாமுயற்சி
- பயப்படாதே என்ற நிலை
- வேற்று நாட்டவரோடு உடன்படிக்கையை எதிர்ப்பது
- மக்களைக் கடிந்து கொள்ளுதல் -மக்களை ஒழுங்குக்கு கொண்டு வருதல்
- அரசியல் உடன்படிக்கை எதிர்த்தல்

வடக்குத் தெற்கு என்ற பிரிந்த நிலை. 10 இனமாக மற்றும் 2 இனமாகப் பிரிந்துள்ள நிலை.

**2. திருமுழுக்கு யோவான்**

இவர் இறைவாக்கினரில் இறுதியானவர். ஒட்டுமொத்த இறைவாக்கினர்களின் செய்தியும் இவரில் காணக்கிடக்கின்றன. இவர் மீட்பின் வரலாற்றை முழுமை யாகக் காட்டுகின்றவராக இருக்கின்றார். மீட்பின் வர லாற்றில் இருக்கின்ற நம்பிக்கையை எதிர்நோக்கைக் கொண்டு வருகின்றார். இறைவன் தன் மக்களுக்குச் செய்ய விருக்கும் அடையாளங்களைக் காட்டுகின்றார். மெசியாவின் முன்னோடியாக இருந்து, மக்களைத் தயார் படுத்துகின்றார். இதைத்தான் பாலைவனத்தில் குரல் ஒன்று ஒலிக்கின்றது (எசா 40 : 3) இல் நாம் காணுகின்றோம். மீட்பின் முன் அறிவிப்பைத் தருகின்றார்

**அருள்முனைவர் ஆ. சூசைமணி,**

(லூக் 1:77-78) எல்லாவற்றுக்கும் மேலாக கிறிஸ்து நம்மோடு இருக்கின்றார் என்று சுட்டிக் காட்டுகின்றார் (யோவா 1:29- 44).

**3. மரியின் ஒத்துழைப்பு**

இயேசுக் கிறிஸ்து மனுவுடல் எடுக்கும் மறைபொருளில் மரியா மனமகிழ்வோடு இறைவனுக்கு ஒத்துழைப்பு நல்குகின்றார்,

கொண்டாட்டங்களை சற்று உற்றுக் கவனிக்கும் போதும், இது 'மரியின் மாதமோ?' என்று நினைக்கத் தோன்றும். இதில் மரியா கிறிஸ்து மனுவுடல் எடுத்தலில் மிகவும் அழகாகப் பொதிந்துள்ளார். அவரின் சிறப்பான ஒத்துழைப்பையும், நாம் பார்க்கின்றோம்.

**அமல உற்பவத் திருவிழா**

அமல உற்பவத் திருவிழா மீட்படைந்தவராக மரியா மனுகுலத்தின் ஒரு முன்னோடியாகக் காட்டுகின்ற விழாவாகும். அத்தோடு கிறிஸ்து மனுவுடல் எடுத்தலின் கனியாகத் திருப்பலியின் இரண்டாம் நற்கருணை மன்றாட்டுச் செபத்தில் மரியா ஒரு புதிய திருஅவையாக உருவாகின்றார். அத்தோடு, திரு அவைகிறித்துவின் மணவாட்டியாக மாசு மறுவற்றதாகக் காட்டுதல் அவரின் அழகை மிளிரச்செய்கின்றது.

திரு அவை அருட்சாதனமாக, வரலாறாக முழுமையாக உருப்பெறுகின்றது. திருவருகைக்காலக் கடவுள் வரலாற்றுக் கடவுள் ஆவார். நாசரேத்தூர் இயேசு மனிதரை முழுமையாக நிறைவாக மீட்க வந்தார். இவர் தந்தையின் திருமுகத்தைப் பிரதிபலிப்பவராக இருக்கின்றார் (யோவா 14:9). இயேசுவின் பிறப்பு மனிதருக்கு ஒரு முழுமையான மீட்பைத் தருகின்றது. இயேசுக் கிறித்துவின் பிறப்பின் அறிவிப்பு மனிதத்தை வளர்த்தெடுப்பதாகும். அத்தோடு இறுதிக்காலத்தை வளர்த்தெடுப்பதாகும். கடவுளின் வருகையைக் காட்ட ஒவ்வொரு மனிதனும் இறை வார்த்தையை அறிவிக்க வேண்டும்.

**திருவருகைக்கால ஆன்மீகம்**

விழிப்புடன், மற்றும் மகிழ்வுடன் காத்திருத்தலாகும். உட்படுத்துதலாகும். மனமாற்றத்திற்கு நம்மை

வாரும் வாரும் ஆண்டவரே விரைவாக வாரும் (திவெ 22: 17-20).

நம் கடவுள் எதிர்நோக்கின் கடவுள் (உரோ 15:13, 8: 24-25).

திருமுழுக்கு யோவானின் போதனை நமக்குத் தொடர் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது.

கடவுளின் ஏழையாக (Anawim) இருக்க நமக்குக் கற்றுக் கொடுக்கின்றது.

எளிமையும், கருணையும் மற்றும் மென்மையும் கொண்டு வாழ நம்மை அழைக்கின்றது (மத் 5:3).

இது இறைவன் தரும் கொடை. ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். தாவீதின் அரசை நிலை நாட்டுவார்.... (எசா 9:6) கடவுளின் அன்பு தன் ஒரே பேறான மகனை அனுப்பியதில் தெரிகின்றது (யோவா 3:16).

* மனித உரு எடுத்ததால் மனிதர்களோடு தோழமை கொண்டார்.

* நமது மீட்புக்காக செல்வராக இருந்தும் ஏழையானார் (2கொரி 8:9).

* கிறிஸ்துவின் பிறப்பு மனித வாழ்வின் புனிதத்தைக் காட்டுகின்றது. இந்த உலகின் ஒவ்வொரு பிறப்பும் இதை வெளிப்படுத்துகின்றது. அவர் நம்மோடு வாழ்ந்தார். அவர் நம் கண்களுக்குப் புலப்பட்டார் இது மரியாவின் ஒத்துழைப்பால் சாத்தியமானது (1யோவா 1:2).

* மெசியாவின் கொடைகள்: மகிழ்வு, அமைதி காரணம் அவர் அமைதியின் அரசர் (எசா 9:6).

* நல்மனத்தவருக்குப் பூவுலகில் அமைதியாகுக (லூக் 2:14).

* எளிமை, ஏழ்மை மற்றும் நம்பிக்கை போன்ற இறைவனின் கொடைகளினால் நம்மை அணி செய்து இறைவன் நம்மோடு என்ற நிலையில் நமது வாழ்வை நீதியிலும், நேர்மையிலும், தூய்மையிலும், புனிதத்திலும் நம்மிடையே குடிகொள்ளவந்த இறைவன். நம்மில் இரண்டறக் கலந்து நமக்கும் நம்மோடு வாழும் அனைவருக்கும் வானவர் அறிவித்த மகிழ்வையும், அமைதியையும், தந்து நம்மை சிறப்புடன் வாழச் செய்வாராக என்று வாழ்த்தி,

*பேயும் போயின அமரர் பிந்தினர்*
*தீயும் போயின அறங்கள் தேறின*
*நோயும் போயின நூற்கள் தோந்தன*
*தோயும் ஒகையில் துலங்கும் வையமே*

(100)

தேம்பாவணி, மகவு அருள் படலம், இறை அவதாரத்தால் உலகு அடைந்த நன்மை)

இறைமகன் கிறிஸ்து மனுவுரு எடுத்ததால், பேய்கள் எல்லாம் போய் ஒழிந்தன, விண்ணவர்களோ, சிறப்பில் மண்ணவர்களுக்குப் பிந்தினர், தீமைகள் எல்லாம் ஒழிந்து போயின, தருமங்கள் தழைத்தன, நோய்கள் அழிந்தன, மறைநூலைப் பற்றி அறிவு தெளிந்தனர் இதனால் இவ்வையகத்தில் இருக்கும் மக்கள் இன்புற்று மகிழ்ந்தனர்.

திருவருகைக் காலத்தில் நம்மையே நன்முறையில் தயாரித்து, கிறிஸ்துவின் உடனிருப்பை உணர்ந்து நல்ல மனிதர்களாக, கிறிஸ்தவர்களாக, நமது நிலைக்கேற்றவாறு சமூக மேம்பாட்டுக்கு உழைத்து, இறை அரசின் மதிப்பீடுகளை நமதாக்குவோம்.

*நன்றி : நம்வாழ்வு*

## வாழ்க்கைத் தத்துவம்:

நீண்டதூரப் பயணம் ஒன்றிற்குப் புறப்பட்ட இளவரசன் தான் கொண்டு செல்ல இருக்கும் பொருட்களின் பட்டியலைத் தந்தையிடம் நீட்டியபோது, தந்தை அதை தொட்டுக்கூடப் பார்க்காமல் தன் மகனிடம்,

- வெறுக்காத இதயம்
- வாடாத புன்னகை
- புண்படுத்தாத வார்த்தைகள்

இவை மூன்றையும் மறவாமல் எடுத்துச் செல். மனித நேயமே மகத்துவம். இனிய சொற்களே தத்துவம் என்றாராம்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## "கிறிஸ்மஸ்"

### ஓர் ஆன்மீகப் பார்வையில்..

எனது உபதலைப்பில் "ஓர் ஆன்மீகப் பார்வையில்..." என்று குறிப்பிட்டிருந் தேன். இன்று பலரும் "ஆன்மீகம்" என்ற சொல்லைத் தங்கள் பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்துகிறார்கள். இது, இன்றைய ஒரு "Fashion" - பாணியாக மாறிவிட்டது. அந்தப் பாணியில் நான் எழுதவில்லை. ஆகவே "ஆன்மீகம்" என்ற சொல்லின் அர்த்தத்தை நான் எப்படிப் பார்க்கின்றேன் என்று விளக்குவது அவசியமென நினைக்கின்றேன். இந்த விளக்கத்தில் தான் இந்தக் கட்டுரையின் அர்த்தம் புரியும்.

*(உண்மையான ஆன்மீக அகப் பயணத்தில் ஈடுபடாதவர்கள், இக்கட்டுரையைப் படிக்காமல் விடுவது நன்று. அன்றேல், படித்துக் குழம்புவீர்கள்.)*

**மதம்.... ஆன்மீகம்**

மதம் வேறு : ஆன்மீகம் வேறு : மதம் ஆன்மீகத்திற்கு வழி கோலுவது. மதத்தின் அடிப்படைத் தன்மை முழு மைக்கு (மத். 5:48) எம்மை அழைத் துச் செல்வது. அந்த முழுமையை நோக்கி, அன்றேல் ஓர்மையை நோக்கி (ஜான் 17:21) நகர்வது - பயணிப்பது தான் ஆன்மீகம். பயணிப்பது ஓர் உருவகமாகப் பயன்படுத்தப்படு கின்றது. முழுமையை நோக்கி நகர்வதை, அசைவதையே பயணமென்கின்றோம்.

வழிகள் பல முடிவுகளாக மாறுவதை நாம் பார்த்திருக்கின்றோம். Means Lecoming the end இங்கு தான் தவறிப்போக வாய்ப்புண்டு. உதாரண- மாக : கல்வி கல்விக்காகவா அன்றேல் மனித வாழ்வின் மேம்பாட்டிற்காகவா என்றவாதம் இன்றும் இல்லாமல் இல்லை. இன்று, கல்வி பெரும்பாலும் போட்டிக்காகவும், தொழிலுக்காகவும், பணத்திற்காகவுமேயென மாறி யுள்ளமை கண்கூடு. வள்ளுவனின் குறளில் நின்று பிறழ்ந்து விட்டது சமூகம். *"கற்க கசடற, கற்றபின் நிற்க அதற்குத் தக"* (குறள்)

இதேபோன்று, இன்று மதங் கள் சடங்குகளாலும், சட்டங்களாலும் ஆராதனைகளாலும், படிப்பினைகளா லும் நிறைந்து, தனது அடிப்படை நோக் கத்தை மறந்து விட்டது. மதம் மதத் திற்காக என்று மாறிவிட்டது. இப்படிப் பட்ட யூதமதச் சூழலில் தான் இயேசு தோன்றினார். யூத மதத்தில் பிறந்து, யூத மதத்தில் வளர்ந்து, யூத முரண் பாடுகளையும், யூத ஆட்சியாளர் களால் (மத- அரசியல் தலைவர்களால்) பயன்படுத்தப்படுவதையும் நன்கே அறிந்து கொண்டார், இயேசு. முடிவு: புரட்சி. யூதம் மாற வேண்டுமென்று விமர்சித்தார். திறந்த மனதோடு, நேர்மையோடு இயேசுவை அறியும் ஆவலோடு இருபத்தொரு நூற் றாண்டுகளாக புறத்தில் வளர்ந்துவிட்ட கத்தோலிக்கத்தின் செல்வாக்கால் (மிகக் கடினம்!) பாதிக்காமல் நற்செய்தி நான் கையும் நீங்களே படியுங்கள். இந்த நாட்களில் "கிறிஸ்மஸ்" விடுமுறை யில், கொண்டாட்டங்களில் மூழ்காது நற்செய்தியைப் படியுங்கள். இயேசுவை - சந்திப்பீர்கள். அகத்தில் சந்திப்பீர்கள். அதுதான் உண்மையான "கிறிஸ்மஸ்" - அனுபவியுங்கள். உங்கள் வாழ்க்கை மாறும், வளரும். ஆன்மீகப் பாதையில் முன்னேறுவீர்கள்.

"கிறிஸ்மஸ்" என்ற சொல்லை நான் பயன்படுத்தியுள்ளேன். "கிறிஸ் மஸ்" என்ற சொல்லில் 'கிறிஸ்' என்ற சொல் கிறிஸ்துவைக் குறிப்பிடுகின்ற தல்லவா? ஆகவே, கிறிஸ்துவைச் சந்திப்பதுதான் 'கிறிஸ்மஸ்' அல்லவா?

**"இயேசுமஸ்!"**

ஆனால் நாம் இயேசுவை மையமாக வைத்தல்லவா, அதுவும் அவரைக் குழந்தையாக்கி குழந்தைக்கு ஓர் உருக்கொடுத்து, அதைச் சிலை யாக்கி வழிபடுகின்றோமே? இது ஏன்? அப்படியானால், "இயேசுமஸ்" என்றல்லவா அழைக்க வேண்டும்? சிந்தியுங்கள்.

சரி, இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றோம் என்று சொல்வீர்கள். ஓரளவு ஒத்துக் கொள்ளு கின்றேன். இறந்த பல பெரியோர்களின், ஏன் புனிதர்களின் பிறந்த நாட்களை நாம் கொண்டாடுகின்றோம். அவர் களைக் குழந்தைகளாக்கி, அக் குழந் தைக்கு உருவம் கொடுத்து, சிலைகளாக் கியா அவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுகின்றோம்? அவர்களுக்கு "ஆராரோ ஆரீரரோ" பாடுகின்றோமா? அவர்களுக்கு "கேக்" வெட்டுகின்றோமா? அவர்கள் பிறந்த வீடுகளையோ அன்றேல் மருத்துவமனைகளையோ கட்டி, அவற்றில் அவர்களைப் படுக்கவைத்து, அவர்களுடைய தாய் தந்தையர்களுக்கு வேறு சிலைகள் அமைத்து, அச்சிலை களை அங்கே வைத்து, இப் பெரி யோருக்கு, புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துகின்றோமா?

உண்மையான ஒரு தேடுநர் (seeker) இக் கேள்விகளைக் கேட்பார். தேடுவார்,

அந்தத் தேடும் பயணத்தில், கேட்டவை சில, அறிந்தவை சில, பழ கின சில, வாழ்ந்தவை சில அர்த்தமற்றுப் போகலாம். அர்த்தமற்றுப் போனவையை விட்டுவிடத்தான் வேண்டும். புதிய வற்றைக் கேட்பார், அறிவார், வாழ்வார். பழையன கழிதலும் புதியன புகுதலும் வாழ்வின் வளர்ச்சிக்கு இன்றியமை யாதவை. சாகவேண்டியவை சாகத் தான் வேண்டும். அப்பொழுதுதான் பதியதொன்று பிறக்கும்.

**நாட்காட்டி**

திருஅவையில் ஒரு நாட்காட்டி உண்டு (Liturgical Calendar) இந்த நாட்காட்டி திருவருகைக்காலம் தொட்டு, உயிர்ப்பு விழா மட்டும் உள்ள முக்கிய காலங்களைக் குறிக்கும். திருத்துவத் திருநாளுடன் அது முடிவடைந்து, பின்னர் ஒரு நீண்ட கொதுக்காலத்தை வரைந்து காட்டும். இந்த நாட்காட்டி ஒரு வருடம் நீடிப்பது. பின்னர் மறு- வருடமும் திருவருகைக் காலத்துடன் "புதிய" (அவ்வளவு புதிதல்ல) ஆண்டு ஆரம்பிக்கும். இதில் புதுமையாக ஒன்றும் இல்லை. The liturgical cycle takes us on a Liturgical circle.. திருவழிபாட்டு சுழற்சி ஒருவரை ஒரு வட்டத்துள் ஓட வைக்கிறது.

சுற்றிச் சுற்றி ஓடும் இந்த 'சைக்கிள்' (cyrcle ) ஒரு வட்டத் துள்ளேயே ஓடுகின்றது. மக்களையும் அந்த வட்டத்துள் சிக்க வைக்கின்றது. பயணம் என்ற சொல்லிற்கு இங்கு இடமில்லை. வட்டத்தை ஏதோ ஓர் இடத்தில் உடைத்துக் கொண்டு, வளர்ந்து முன்னேறிச் செல்ல இங்கு வாய்ப்பில்லை. ஒரு தேடுநர் ஆன் மீகப் பயணத்தில் பயணிப்பவர் அந்த வட்டத்தினுள் இருந்து வெளியேறு வார். அவரது ஆன்மீகப் பயணம் தொடரும்... முன்நோக்கிச் செல்லும். நாட்காட்டி அவருக்குத் தேவைப்படாது. அதனால் தேடுநர், ஆன்மீகப் பயணத்தில் பயணிப்போர் இவற்றை - நாட்காட்டி உட்பட எதிர்க்கிறார் கள் என்று முடிவு செய்வது ஆரோக்கியமற்றது. குறுகிய மனம் கொண்டோரின் குறுகிய முடிவுகள், எதிர்ப்பது வேறு: மேவி வாழ்வது வேறு: எதிர்ப்போர் எல்லாம் மேவிய வர் அல்ல. மேவியவர் எல்லாம் எதிர்ப்பவரும் அல்ல.

**மேவி வாழ்வோர்**

அயர்லாந்து நாட்டைப் பிறப் பிடமாகவும், யப்பான் நாட்டை வதி விடமாகவும் கொண்டு பல ஆன்மீக நூல்களை எழுதியவர் வில்லியம் ஜோன்சன் அவர்கள். இவரைச் சந் திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மதம், ஆன்மீகம் போன்றவற்றை யொட்டி எனக்குப் பல சந்தேகங்கள் இருந்தன. அவரிடம் ஒவ்வொன்றா கக் கேட்டேன்: தெளிவு பெற்றேன். விடை பெறும் நேரம் வந்த பொழுது, அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட் டார். ஞான வாழ்வை (Mysticism) திரு அவை ஏன் வளர்ப்பதில்லை? ஏதோ ஒரு துணிவோடு, நான் சொன்னேன் "ஏனென்றால் ஞானிகளைத் திரு அவையினால் கட்டுப்படுத்த முடியாது" இதை விளக்கிச் சொன்னால், ஞானி கள் மதங்களை நன்கே பயன்படுத்தி, இப்பொழுது அவர்கள் மதங்களை மேவி வாழ்வோர். கிறிஸ்துவை நம் வாழ்வில் சந்திக்க முனைவோர், அச் சந்திப்பில் தான் 'கிறிஸ்மஸ்' நிகழும். அது, ஒரு நாள் நிகழ்வல்ல. நித்தமும் உண்டு. நித்தமும் கிறிஸ்மஸ்.

**கரவையூர்ச் செல்வம்**



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்காலத்) திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

குடும்பங்களைத் தரிசிப்பது, திருவரு ளடையாளங்களை வழங்குவது, திரு- மணங்களை நிறைவேற்றுவது, அல்லது சீராக்குவது, முதியோர் மறையறிவு வழங்கு வது போன்ற பல கடினமான பணிகள், போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர், தங்கு மிடம் போன்ற பல்வேறு வசதிக் குறை வுகள் மத்தியில் இடம்பெற் றன. இவை யாவும் மக்களின் வசதிக் கேற்பவே நடந்தன. ஏனெனில் ஞாயிறு தினத்தில் கூட வயல் மற்றும் தோட்ட வேலைகள் காரணமாக ஒரு நாள் சம்பளம், கூலி கிடைக்காவிட்டால் அடுத்த நாள் சமைத்துண்ண முடியாது. எனவே மக்களின் வசதி கவனத்தில் கொள்ளப் பட்ட அதேவேளை பலர் கத் தோலிக்க நம்பிக்கையின்பாற்பட்டுஅருட் பணியாளர்களுடன் ஒத்துழைத்து அவர் களின் பணிக்கு உறுதுணையாகவும் இருந்தனர்.

பாரம்பரியத்தினரின் இடையூறுகளுக்கு மத்தியில் மறை யாசிரியர்களாகவும் பாடசாலை ஆசிரியர் பாரம்பரியக் கத் தோலிக்கர் பலர் தாம் ஏற்கெனவே கொண்டிருந்த ஆதிக்க மனப் பான்மை யையும்சமூகவேறுபாடுகளையும்அங்கும் நிலைநாட்டத் தவறியதில்லை. பல இடங் களில் அருட்பணியாளர்களுக்கு இவ்விட யம் சிக்கலைக் கொடுத்தது.

மக்களோடு மக்களாக வாழ்ந்து சிறுவர் மறைக்கல்வியிலும் கூடுதலாக வளர்ந் தோர் மறையறிவு வழங்கல் மிகவும் அவ சியமாக இருந்தது. தற்போதும் பல பங்கு களில் காணப்படுவது போல மறையறிவில் அறியாமை காரணமாகவும், வேறு சமயங் களைச் சேர்ந்தவர்களைக் கத்தோலிக்கர் பலர் திருமணம் செய்ய வேண்டிய கட்டா யச் சூழ்நிலையால், இவற்றைச் சிரமத்து டனும் பொறுமையுடனும் சீராக்குவதும், வேறு கிறிஸ்தவ சபைகளின் ஊடுருவல்க ளில் இருந்து கத்தோலிக்கரைப் பாதுகாப் பதும் பிரதான விடயங்களாய் இருந்தன.


**மறைசாட்சிய வாழ்வு**

அருட்பணியாளர்களே முதலுதவிப் பெட்டியுடன்சென்றுஉடல்நோய், உளநோய் தீர்க்கும் வைத்தியர்களாகவும்,

தொடரும்....

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## காலத்தின் காவலனாய் வாராயோ....?



விண்ணின் விடியலாய் மண்ணகத்தில் மனுவானவரே
தண்ணொளியில் விண்தூதர் மகிழ்ந்தே பண்பாட
கண்ணின் மணியாய் கன்னி மரி மடியில்
மண்ணகம் விடிவுகாண வந்துதித்தீர் மீட்பராய்!

ஆயத்தமாகுங்கள் பாதையைச் செம்மையாக்குங்கள்
தயங்காது உரைத்தார் தவசி யோவானும்
முயன்று மனமாற்றம் பெற்ற மானிடரும்
வியந்தே வணங்கினர் தொழுவின் தூயவனை

ஏழைக்கோலம் பூண்டீர் எளியவர் வளம்பெற
ஏழையரின் பாதங்களோ பயணிக்க வழியின்றி
கோழையராய் நிற்கும் நிலை இங்கு காண்பீரோ
மழலை மொழியால் ஓர் அமைதி வார்த்தை கூறீரோ

போதையையே பாதையாக்கு மாகிழ்வோரும்
தாயவளின் மடிதனை நெருப்பாக்கி வாழ்வோரும்
கோதையரைக் கொடுமைக்குள்ளாக்கித் தாழ்வோரும்
பேதைமை அகற்றி அறிவொளிகாண அருளாயோ

நீதியும் உண்மையும் உலகில் விலைபோகின்றன
பாதி வழியிலே பல உயிர்கள் பறிபோகின்றன
மீதி வாழ்வை நகர்த்துவது எப்படியென ஏங்கி
நாதியற்று நலிவுற்றுத் துடிப்பவரின் துணையாகீரோ

சாபமாய் சமூகத்தில் பரவும் தீவினைகள்
தாபம் கொள்ள வைக்கிறதே, சத்தியம் ஓங்க
பாதம் பணிகின்றோம் அமைதி வேந்தன் நீயென
வேதம் முன்னறிவித்த விடுதலைப் பேரொளியாகீரோ

ஆலம் விழுதாய் பதிந்த பண்பாடுகளோ
கோலம் குன்றி குலமானமதைப் புண்ணாக்குகிறதே
வேலம் கசப்பாய் மாறிய வேத வார்த்தை
ஞாலத்தின் நங்கூரமாய் மாறிடாதோ
காலத்தின் காவலனே அருட்கொடையின்
பாலமாய் பாரினில் வாராயோ

**S.M.வுளோறன்ஸ்**
**இளவாலை**

## மீண்டும் பிறந்துவிடு மானிட மனங்களில்

மானிடரின் மாற்றத்திற்காய்
மாடடைக் குடிலில் குழந்தை உருவில்
மகிழ்வுடனே பிறந்த பாலகா
மாற்றமடையாதா உம் பிறப்பால்
மாந்தரின் வாழ்வு

சுயநலத்துடனே பேராசையும் ஆணவமும்
ஆட்டிப்படைக்கின்றது மனித வாழ்வை
மாற்றங் காணாதோ மனித மனங்கள் என
ஏங்கியே நீரும் குடில்தனில் அழுகின்றீரோ

அலைபேசியிலும் முகநூலிலும் அலையும்
மனிதர்களின் நிலையினை அறிந்து நீரும்
அமைதியின் உருவமான உமக்குள்ளே
விம்மியே விடியலுக்காய் அழுகின்றீரோ

போதை என்னும் மாயப்பிடியில் அகப்பட்டு
வெட்டியும் குத்தியும் வன்முறையில்
தாண்டவமாடும்
இளைய தலைமுறையினரின்
அவல நிலையை அறிந்து நீரும்
அவர்கள் தம் விடியலுக்காய் மாபரனே
அழுகின்றீரோ

உற்ற உறவுகளும் உடன் பிறப்புக்களும்
துக்க சாகரத்தில் மூழ்கி இருக்கையில்
அந்நியர்களாகவே இருந்து ஆனந்தப்படும்
இரக்கமற்ற அரக்க மனங்களுக்காக
அழுகின்றீரோ

ஏங்கியே விம்மி நீரும் அழுதிடும் அழுகை
மாற்றங் காணாத மானிடர்களின் மனங்களை
ஊடுருவக்குத்தியே மீண்டும் திறக்க
மறுபடியும் பிறந்துவிடு மானிட உள்ளங்களில்

**காவலூர் றமில்டன்**
**ஊர்காவற்துறை**



## காலமிது

காலமென்ன காலமிது
கண்மூடித் திறக்கும் முன்பே
கனவாகும் காலமிது

காலையிலும் மாலையிலும்
காணவில்லை என்று
அழும் அன்னையர்கள் காலமிது
காத்திருந்து காத்திருந்து கடைசிவரை
கிடைக்கவில்லை என் மகள் என
ஓலமிடும் காலமிது

பள்ளிக்குச் சென்ற மாணவனும்
வேலைக்குச் சென்ற இளைஞனும்
போகும் போது மான்போல்
துள்ளிக் குதிக்கின்றனர்
வருகையில் அச்சாணி களன்ற வண்டிபோல்
தள்ளாட வைக்கும் காலமிது

கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தேடி
வரும் எனும் காலம் போய்
எறும்பு கூட்டாக இருந்தால் கரும்பு
அடித்துச் செல்லும் என்றால் போல்
அநாகரிக உடை அணிந்து ஆபத்தான
மேக்கப்பில் அலைய வைக்கும் காலமிது

அம்மா எனும் சொல்லுக்கு உயர்வாய் எந்தச்
சொல்லும் இல்லை அந்தச் சொல்லுக்கும் குறையை
உருவாக்கும் காலமிது
அம்மா என்று அழைத்தும் கேட்கவில்லை
மனைவி என்று அழைத்தும் கேட்கவில்லை
கேட்கவில்லை கேட்கவில்லை கேட்கவேயில்லை

கண்ணும் காதும் காட்சியில் உள்ளது
தொலைக்காட்சியில் உள்ளது
நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைப்பதும்
தொலைக்காட்சிப் பெட்டியை நடுக்கோலில்
மாட்டுவதும் ஒன்றென உணரமுடியாத காலமிது

முடியாது முடியாது உம்மால் இது முடியாது
ஆனால் அத்தனை சீரழிவிற்கும் ஒரு முடிவு கட்ட
என்னால் முடியும் எனக்கூறி
முதலும் முடிவும் நானே என்று சொல்லி
என்னையும் உன்னையும் மீட்க
மீட்பராம் இயேசு பாலன் பிறந்த காலமிது

**ஜெ.நிது**
**பருத்தித்துறை**

## நம்பிக்கை தாராயோ இறை பாலகனே

நூற்றாண்டுகள் பல சென்றாலும்
மாற்றமில்லை உலகினிலே
நீண்டு வரும் தீச்செயல்கள்
தினம் தினம் பெருகிப் படருதே
மாண்டுபோன மனித மாண்பு
மலர்ந்து மகிழ்ந்திட இறை
நம்பிக்கை தாராயோ பாலகனே

மனித வாழ்வு சீரழிந்து நவீன தொழில் நுட்பங்களால்
இனிய இளம் மாணவப் பிஞ்சுகளின் பரிதாப நிலைமாறி
இறைப்பற்றின் உண்மைவழி உய்த்துணர்ந்து
ஆன்மாவைக் காத்திட
இறை பாலகனே நம்பிக்கை தாராயோ!

பேராசையால் சுரண்டலும் மிரட்டலும்
திருட்டும் கொள்ளையும்
அநீதியும் அடக்குமுறையும் வாள்வெட்டும்
போதைப்பொருள் பாவனையாலும்
தடுமாறும் இறையோரின் நல் இளமைத்துவம்
மேலோங்க தளரா நம்பிக்கை தாராயோ பாலகனே!

உணவிற்காய்ப் போராடும் ஏழைகள் விதவைகள்
உறவுகளை இழந்து மழலைகள் முதியோர்கள்
விடியலுக்காய் ஏங்கிக் காத்திருக்கும்
மனங்களில் மகிழ்ந்திட விடிவெள்ளியாய்
நம்பிக்கை ஒளி தாராயோ பாலகனே!

விடுதலையை எதிர்நோக்கி வாழும் வக்கிர பூமியிலே
படுகொலைகள் சூழ்ந்த அவநம்பிக்கையால்
தீரா நோய்கள் ஈடுசெய்ய முடியா இழப்புக்கள்
போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள்
நாடு எதிர்கொள்ள முடியா பொருளாதார நெருக்கீடுகள்

முழுமனித விடுதலை பெற்று
இறைவனோடிணைந்து பயணித்து
தொலைந்திருக்கும் விழுமியங்கள்
முதிர்ச்சி பெற்று நிலைத்திருக்கும்
நிலைவாழ்வைச் சுவைத்திடவும்
நிலையான உடனிருப்பால் நம்பிக்கை
தாராயோ பாலகனே!

**திருமதி தவமணி பேரின்பநாதன்**
**உரும்பிராய்**



கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மனிதம் மலர்ந்திட மண்ணிலே பிறந்தார்

விண்ணுலக தேவன் விடிவெள்ளியானார்
மண்ணுலகு மலர்ந்திட மடியினில் தவழ்ந்தார்
கடவுளின் மாட்சியால் கருவிலே மலர்ந்தவர்
உடலெடுத்து சாட்சியாய் உருவமாய் தோன்றினார்

கலியுகக் காலத்தில் நாம் கதிகலங்கி நின்றாலும்
கருணையுடன் எம் தேவன் கண்ணெதிரே தோன்றினார்
உருவிலாத் தேவன் உண்மையாய் மலர்ந்திட்டார்
தெருவோரம் நிற்போர்க்கு அருளிரக்கம் கொண்டிடுவார்

பாரமான சுமைகளைத் தூரமாக எறிந்திடுவார்
ஆதாரம் அற்றோரை அன்போடணைத்திடுவார்
மாறாத பிணி நீக்கும் மருந்தாக மாறிடுவார்
தீராத எம் கவலைகளைக் களைந்தவர் காத்திடுவார்

ஏழ்மையின் தவிப்பால் ஏங்கி நிற்போர்க்கும்
வாழ்வில் வீழ்ந்து விடிவின்றி தவிப்போர்க்கும்
சூழ்ந்த துன்பம் தொடர்கதையானோர்க்கும்
சோகங்கள் களைந்தவர் சுகபோகங்கள் தந்திடுவார்

மனிதம் மலர்ந்திட மண்ணிலே பிறந்தார்
புனிதம் நிலைத்திட புண்ணியனாய் மலர்ந்தார்
உத்தமனாய்ப் பிறந்த உன்னத தேவனை
சொத்தாக வணங்கி நாம் போற்றி மகிழ்ந்திடுவோம்

**அ.ஜஸ்மின் ஷறோன்**
**மன்னார்**





## அடிமை விலங்கொடிக்க பிறந்துவிடு பாலகா

ஊரும் இல்லை பேரும் இல்லை
போகும் வழி தூரமில்லையென
உணர்வற்று வாழுகின்ற மனித
மனங்களில் வந்து பிறந்துவிடு

போதையே வாழ்வென எண்ணி
தினமும் மூழ்கியே வாழும் உலகில்
பாதைகள் காட்டி ஒளிவீச
உள்ளங்களில் வந்து பிறந்துவிடு

விடியலைக் காணுமுன் போதையால்
மடிந்துவிட எண்ணும் இளையோர்
இறையச்சம் கொண்டு பாதைமாற
ஒளிகாட்டும் விளக்காய் பிறந்துவிடு

உள்ளங்களில் உண்மையின்றி
பொய்களும் பூசல்களும் நிறைந்து
பூமியை அழிக்கின்ற அவலங்கள் மாற
ஆயனாக வந்து பிறந்துவிடு

மாண்டு விட்டோமோ நாம்
மீண்டிட முடியவில்லையே என
ஏங்கியே தவித்திடும் எம்மவரின்
அடிமை விலங்கொடிக்க
வந்து பிறந்து விடு...

**சே. அருள்மதி**
**மல்வம் - உடுவில்**

## பாடு தினம் பாடு

வண்ண மலர் பூத்ததை
வாழ்த்து தினம் வாழ்த்து
இயேசு பாலன் நாமத்தை

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ...

ஏழைகளைத் தேடி வந்தார்
சொல்லிச் சொல்லிப் பாடு
எளியவரைத் தேற்ற வந்தார்
அதையும் சொல்லிப்பாடு

பாடு பாடு புகழ்ந்து பாடு
நன்றாய் பாடு என்றும் பாடு

பாவிகளை மீட்க வந்தார்
சொல்லிச் சொல்லிப் பாடு
அடிமை விலங்கை
உடைக்க வந்தார்
அதையும் சொல்லிப்பாடு
இயேசு நாமத்தை
உன் மனதில்
ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து பாடு

## எம் இதயங்களில் பிறந்திடுவாய்

காலம் நிறைவேறியபோது
மக்களை மீட்பதற்காக
அன்று நீர் மனுவுருவானீர்
இன்றும் உமது பிறப்பு
எம்மை மீட்க வேண்டும்
மனித மாண்பு தொலைந்து விட்டது
மானுடம் மதிக்கப்படுவதில்லை
நீதியும் நேர்மையும் எட்டாக்கனி
போதைப் பொருள் பாவனையே
இமயமாய் உயர்ந்து விட்டது
உரிமைகள் மறுக்கப்படுகின்றது
காக்க வேண்டியவர்கள்
இங்கு கயமைத்தனத்துக்குள்
முழுமையாய் புதைந்து
விட்டனர்
செல்வர்கள் செருக்கோடு வாழ
ஏழைகள் வாழ்வுக்காய்
ஏங்குகின்றனர்
இளையோரின் வாழ்வு
சீரழிந்து விட்டது
ஒளிவீசும் எதிர்காலம்
எம்மண்ணில் உதயமாக
நீதியின் தேவனாய்
இருள் அகற்றும் சுடராய்
எம் இதயங்களில் பிறந்திடுவாய்

**அளவையூர் அமலன்**



## மனக் குடிலில் பிறக்க வா!

மாண்புகள் கட்டப்படாமல்
மாளிகைகள் கட்டி வாழ்ந்த
மனிதன் அந்த
மாண்புகள் வந்தபோதும்
மாளிகையில் இடம்
கொடுக்கவில்லை.
இன்றோ பல மமதைகள்
கழுவப்பட்டுக் கொண்டிருக்கின்றது
அந்த மாபரன்
எம் மனக்குடிலில்
வந்து பிறக்க நாம்
இடமளிப்போம் இன்று.

## மனிதம் மலர்ந்திட மண்ணில் பிறந்திடவா பாலகா



இறையுறவில் இழந்த இன்பத்தினை - என்றும்
பெற்றிடவே இன்னமுதாய் வந்துதித்தார்
ஏற்றத் தாழ்வுகள் களைந்திடவே என்றும்
எளிமையுடனே மண்ணில் வந்துதித்தார்

காலங்கள் கடந்திடினும் கடவுள் அருள்
நிறைவாய் பெற்றிடவே கருணைத் தேவன்
கனிவுடையோர் உள்ளத்தில் - காலமெல்லாம்
அமைதியின் உறைவிடமாய் அவதரித்தார்

மாறாத் துயரங்கள் மண்ணோடு மடிந்திடவே
மாயைகள் யாவும் மறைந்து ஒழிந்திடவே
மாந்தர்கள் உலகில் மனிதத்தினை மதித்திடவே
மனுமகனாய் பிறந்திட்டார் நம் தேவமகன்

கொலையும், கொள்ளையும்
வன்முறையும், லஞ்சமும்
நிறைந்த இவ் உலகமதில்
கத்தியும், வாளும் கயவர் கூட்டங்களும்
நிறைந்த இவ் உலகினில்
மாந்தர்கள் மனதில் மனிதம் நிலைத்திட
வந்திடு பாலகா

பொருளாதார சுமைகளினால்
தினம் தவிக்கும் மாந்தர்களும்
ஒருநேர உணவிற்காய் ஏங்கிடும் உள்ளங்களிலும்
உற்றார் உதவிடாரா எனத் தவிக்கும் உறவுகளும்
உறவுகள் நிலைகுலைந்து வாழும் இப்பூமிதனில்
உன்னத சுடர் ஒளியாய் உதித்திடு பாலகா

கஞ்சாவும் ஹெரோயினும் கலந்துள்ள வாழ்வுதனில்
சின்னச் சிறு பிஞ்சுகள் உள்ளங்களை
சிதைத்திடும் உலகமதில்
இளம் தலைமுறையின்
ஏதிலியான வாழ்க்கை முறையும்
கலாசார மோகத்தினால்
நாதியற்று வாழ்ந்திடும் இப்பூமிதனில்
வந்திதுதித்திடு தேவ பாலகா

**யே.அனுஸ்டதாஸ்**
**மாதகல்**

## மீட்க வந்த மெசியா

வானவர் பாடிட
ஞானிகள் தேடிட
மாடடைக் குடிலில்
மரியன்னை மடியில்
மாபரன் இயேசு
மன்னனாகப் பிறந்தார்
பாவங்கள் போக்கிட
பாதைகள் காட்டிட
பாரினினை மீட்டிட
மெசியாவாகப் பிறந்தார்
கூடியே நாமும்
நாடியே அவரை
பாடியே துதித்துப்
போற்றியே மகிழ்வோம்

**சேரூபன் ஷெர்வின்**
**மல்வம், உடுவில்**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




**யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883)**

**கோயம்புத்தூரில் மறைபணியாளராகப் பணி**

திருத்தூது மாவட்டத்தின் ஒதுக்குப்புறத்திலும், ஒரு கவர்ச்சியற்ற தூரப்பிரதேசமாக விளங்கிய ஊட்டிப்பகுதியில் இவர்தான் முதல் மறைபணி யாளராகப் பணியாற்ற வாய்ப்புக்கிடைத்தமையை ஒரு பேறாகக்கருதினார். ஆயினும் இப்போது இவ் விடம் தென் இந்தியாவிலேயே கவர்ச்சிகரமான, பல சிறப்புக்களையும் கொண்ட ஒரு மறைதள மாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்மறைத்தளத்தில் பல வருடங்கள் அய ராது பணியாற்றியபின் இவரது உடல்நிலை பாதிக் கப்பட்டதையிட்டு நீலகிரிப்பகுதி மறைத்தளத்திற்கு அனுப்பப்பட்டார். இம்மறைத்தளத்தில் தமது திருத் தூதுப் பணியிலீடுபட்டுக்கொண்டிருந்த போது தான் இன்னும் ஒரு ஆன்மீக நிறைவு நிலைக்குத் தான் அழைக்கப்படுவதாகத்தமது உள்ளத்தில் உணர்ந்தார். இதுவரையில் ஒரு மறைமாவட்டக் குருவாகப் பணியாற்றிக்கொண்டிருந்த இவர் தான் ஒரு துறவற சபையில் இணைந்து ஏன் பணியாற்றக்கூடாது என்ற எண்ணம் இவரில் துளிர்விடத்துவங்கியது.

இந்தியாவை விட்டு வெளியேறி பிரான்சுக் குச் சென்று அங்கு வெளிநாட்டு மறைப்பணியில் ஈடுபட்டுள்ள ஒரு துறவறசபையில் சேர்வது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது பஜீன் அடிகள்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

(Fr. Pagean) எனும் தமது சக மறைப்பணியாள ரிடமிருந்து இலங்கையில் அப்போது மறைப்பணி யாற்றிக்கொண்டிருந்த செமேரியா அடிகள் பற்றி யும் அவரது அமல மரித்தியாகிகள் துறவறசபை பற்றியும் கேள்வியுற்றார். இந்த பஜீன் அடிகள் M.E.P. குருக்கள் குழாமில் ஒரு குருவாக கோயம்புத்தூரில் பணியாற்றிக் கொண்டிருந் தார். இவர் முன்னதாக அமலமரித்தியாகிகள் சபையில் இணைவதற்கு முனைந்தபோது இவ ரது ஆயர் இதற்கு அனுமதியளிக்கவில்லை. பொன்ஜீன் அடிகள் இலங்கையில் யாழ்ப்பாணத் திருத்தூது மாவட்டத்தில் பணியாற்றி வந்த அமல மரித்தியாகிகள் சபையின் முதல்வராகவிருந்த செமேரியா அடிகளுக்கு 1855ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி தம்மை அறிமுகப்படுத்தி அமல மரித் தியாகிகள் சபையில் தான் சேர அமதியும் கோரி ஒரு உணர்வுபூர்வமான மடல் எழுதி னார். இக்கடிதத்தினால் மிகவும் ஈர்க்கப்பட்ட வராக செமேரியா அடிகள் பொன்ஜீன் அடிகளின் வேண்டுகோளுக்குச் சாதகமான பதிலை அனுப்பினார். அதில் அவரது ஆயருடைய அனு-மதி யையும் M.E.P. குருக்கள் அவையின் சம்மதத் தையும் பெறும்படி எழுதியிருந்தார்.

**அமலமரித்தியாகிகள் துறவறசபையில் மறைப் பணிக்கான அழைப்பு**

பொன்ஜீன் அடிகள் துறவற சபையில் சேர் வதற்கான ஆவணங்கள் மற்றும் ஆயத்தங்களைத் தயார் செய்வதிலீடுபட்டார். அதேவேளையில் செமே-ரியா அடிகள் அமலமரித்தியாகிகள் சபையின் பொது அமர்வில் கலந்துகொள்வதற்காக சபைத் தலைமை யில்லம் அமைந்துள்ள மார்செயில்ஸ் நகருக்குப் புறப்படத்தயாரானார். பொன்ஜீன் அடிகள் சபை யொழுங்கின்படி பிரான்சுக்குச்சென்று அங்கு தமது நவசந்நியாசப்பயிற்சியை நிறைவு செய்ய எவ்வளவு ஆர்வமாயுள்ளார் என்பதையுணர்ந்த செமேரியா அடிகள் பொன்ஜீன் அடிகளை நேரடியாக சபை நிறுவுநர் புனித யூஜின் டி மசனட் ஆயர் முன்னிலை யில் கொணர்ந்து அறிமுகம் செய்துவைக்க விரும்பினார். எனவே உடனடியாக இலங் கைக்கு வரும்படியும் இருவரும் ஒன்றாக ஐரோப்பா பயணமாகலாம் என்றும் பொன்ஜீன் அடிகளுக்குச் செமேரியா அடிகள் கடிதம் எழுதினார். ஆயினும் கடும்முயற்சியெடுத்தும் பொன்ஜீன் அடிகளால் செமே ரியா அடிகள் இலங்கையை விட்டுப்பிரான்ஸ் செல்வ தற்குமுன் வந்து சேரமுடியவில்லை. 1856ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதியே அதாவது செமேரியா அடிகள் இலங்கையை விட்டுப்புறப்பட்ட சில மாதங் களின் பின்னரே பொன்ஜீன் அடிகளால் யாழ்ப் பாணம் வந்து சேர முடிந்தது. எனவே ஏறக்குறைய 4 மாதங்கள் யாழ்ப்பாணத்தில் செமேரியா அடிகள் வந்து சேரும்வரை மற்ற அமலமரித்தியாகிகள் சபைக்குருக்களுடன் தங்கியிருந்தார்.

இந்தச்சில மாதங்களிலும் அமலமரித்தியாகிகள் சபைக்குருக்களுக்கு மறையுரைகளாற்றுவதிலும், மறைக்கல்வி புகட்டுவதிலும் மற்றும் பல்வேறு வழிகளிலும் ஒத்தாசையாகவிருந்தார். அத்துடன் அவர்களூடாக அமலமரித்தியாகிகள் துறவற சபை பற்றியும், சபை நிறுவுநர் புனித யூஜின் டி மசனட் பற்றியும் நன்கு அறிந்து கொண்டார். (ஏற்கெனவே ஆயர் செமேரியா ஆண்டகை பற்றிப் பார்த்தது போல) அதேவேளையில் செமேரியா அடிகள் யாழ்ப்பாணத் திருத்தூது முதல்வர் ஆயர் ஒறாசியோ பெற்றக் கீனிக்கு வழிவரும் துணை ஆயராக 1856ம் ஆண்டு யூன் மாதம் 6ம் திகதி நியமனம் பெற்று, மார்செயில்ஸ் நகரில் சபை நிறுவுநர் ஆயர் புனித யூஜின் டி மசனட் ஆண்டகையால் அதேவருடம் ஆகஸ்ட் 20ம் திகதி ஆயராக அருட்பொழிவு செய்யப் பட்டார். அதனைத்தொடர்ந்து செமேரியா ஆண் டகை 1857ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி மார் செயில்ஸ் நகரை விட்டுப்புறப்பட்டு அதே வருடம் ஏப் ரல் 15ம் திகதி காலித்துறைமுகத்தை வந்தடைந்தார்.

(தொடரும்....)

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

**210.எமது மறைக்கெதிரான முதன்மையான பாவங்கள் எவை?**

எமது மறைக்கெதிரான முதன்மையான பாவங்களாவன: பொய்த்தெய்வங்களை அல்லது விக்கிரகங்களை வணங்குதல், இறைவனுக்கு மாத்திரமேயுள்ள மரியாதையை படைக்கப்பட்ட பொருள்களுக்கு வழங்குதல்.

**211.முதலாவது கட்டளையானது உருவங்கள் செய்வதைத் தடை செய்கின்றதா?**

முதலாவது கட்டளையானது உருவங்கள் செய்வதைத் தடை செய்யவில்லை. ஆனால் விக்கிரகங்கள் செய்வதை தடை செய்கிறது. அதாவது கடவுளாக ஆராதனை செய்யப்படுவதற்காக அல்லது மரியாதை செய்யப்படுவதற்காகப் செய்யப்படும் உருவங்களை தடைசெய்கிறது.

**212. விக்கிரகங்கள் என்றால் என்ன?**

இறைவனாக வணங்கப்படுகின்ற சிலைகள் விக்கிரகங்கள் ஆகும்.

**213.சாத்தானோடு தொடர்புடைய செயற்பாடுகளையும் மாஜயால பழக்கவழக்கங்களையும் முதலாம் கட்டளை தடைசெய்கிறதா?**

முதலாம் கட்டளையானது சாத்தானோடு தொடர்புபட்ட விடயங்களையும் மாஜயால செயற்பாடுகளையும் தடை செய்கிறது, குறிப்பாக சாத்திரம் கேட்டல், குறிப்புக்கேட்டல், மந்திரங்கள், செய் வினைகள், கனவுகள், போன்ற முட்டாள்தனமான செயற் பாடுகளைத் தடைசெய்கின்றது.

**214. திருப்பொழிவு செய்யப்பட்ட மனிதர்களையும், புனித பொருட்களையும் அவமரியாதை செய்தலும் புனித பொருட்களை பணத்திற்காக விற்றலும், முதலாம் கட்ட ளையால் தடைசெய்யப்படுகின்றனவா?**

ஆம், திருப்பொழிவு செய்யப்பட்ட மனிதர்களையும் புனித பொருட்களையும் அவமரியாதை செய்தலும், புனித பொருட்களை பணத்திற்காக விற்றலும், முதலாம் கட்டளையால் தடைசெய்யப் படுகின்றது.

**215.விண்ணகத் தூதர்களுக்கும், புனிதர்களுக்கும் ஆரா தனையும் புகழ்ச்சியும் செய்வது தடைசெய்யப்படுகின்றதா?**

ஆம், விண்ணக தூதருக்கும் புனிதர்களுக்கும் ஆராதனை யும் புகழ்ச்சியும் செய்வது தடைசெய்யப்படுகின்றது. காரணம் புகழ்ச்சியும் ஆராதனையும் கடவுளுக்கே உரியது.

**216.எவ்வாறான மரியாதையையும் வணக்கத்தையும் விண்ணகத் தூதர்களுக்கும் புனிதர்களுக்கும் நாம் வழங்க வேண்டும்?**

விண்ணகத் தூதர்களுக்கும் புனிதர்களுக்கும் இறை வனைவிட கீழ்நிலை மரியாதையும் வணக்கமும் வழங்கப்பட வேண்டும். ஏனெனில் இவர்கள் இறைவனின் விசேட நண்பர்க ளாகவும் பணியாளர்களாகவும் இருக்கின்றனர்.

**217. புனித பண்டங்கள், திருச்சிலுவைகள், புனித படங்கள் என்பவற்றிற்கு எவ்வாறான மரியாதை செலுத்தப்பட வேண்டும்?**

புனித பண்டங்கள், திருச்சிலுவைகள், புனித படங்கள் கிறிஸ்து வினுடையதும் அவருடைய புனிதர்களினுடையதுமான பொருட் களாக இருப்பதால் அவர்களைத் தொடர்புபடுத்திய மரியாதை கொடுக்கப்பட வேண்டும். *(தொடரும்...)*

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

18

**அத்தியாயம் 8**

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**8.9 பிற மத சகோதரருடன் ஒன்றித்து, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அநீதிகளை எதிர்ப்பதிலும் செயற்படவேண்டும்.**

நான் பங்கெடுத்த ஆசியத் திருஅவை ஆயர்களின் இறையியலாளர் குழு (Theological Advisory Committee of the FABC) 1986 ஆம்ஆண்டு தனது முதற்கவனத்தை இவ்வி டயத்தின் மேல் செலுத்தியது. இக்குழு சர்வ மத உரையாடல் என்ற தலைப்பில் 6 அறிவுரைகளை வழங்கியிருந்தது. நாம் தமிழர், கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு முன், இறைவன் எங்களை மனிதராக, அதிலும் தமிழராகப் படைத்தார். நாம் தமிழ் மனிதர்களாவதற்கு எமக்கு மொழி, கலை, கலாசாரம் அனைத்தும் இனாமாக இறைவனால் கொடுக்கப்பட்டவை. எமது முன்னோர் இயற்கையுடன் இணைந்து, இறைவனைத் தேடியவர்கள். தாங்கள் பெற்ற இறைவெளிப்படுத்தல்களை வெவ்வேறு விதத்தில் தனிஅனுபவமாகப் பெற்று உடன் தமிழர்களுடன் பகிர்ந்து, அவையின் அடிப்படையில், காண முடியாத சக்திகளுக்குப் பயந்து பணிந்து நடக்க முயன்றனர். சிலர் விசேட அனுபவம் பெற்றவர்களாகத் தமது ஞானத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தினர். வழிபாடுகள் செய்தனர். இப்படியாக மதங்கள் வளரந்து, திரண்டு, இந்தியாவின் மக்கள் மத்தியில் இந்து மதம் பரவியது.


தமிழர் மத்தியில் இந்து மதம், சைவமாக இடம் பிடித்துள்ளது. இந் நிலை யில்தான் கிறிஸ்தவத்தில் மாத்திரமே மீட்பு, என்று ஐரோப்பிய மறை பரப் பாளர்கள் தங்களுடைய விசு வாசத்தில் கூறியதை, தமிழர்கள், முழுமையாக நம்பி, கிறிஸ்தவர்களாகினர். அத்தோடு, இந்து சைவ மதங்களைப் பற்றி, ஐரோப்பியர் தங்கள் விசுவாசத்தில் கூறியவற்றை ஏற்று, சில தவறான வெறுப்புடன் இந்து சைவ மக்களைக் கணித்தனர்.

ஆனால் இன்று 2ஆம் வத்திக்கான் சங்கம், பிற மதங்களுக்கும் இரட் சணிய முக்கியத்துவம் இருக்கின்றது என்பதை ஏற்று விளக்கி இருக்கின்றது. ஆகையால் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்து சைவ மதத்திற்கு உரிய மதிப்பளித்து, தேவையற்ற சச்சரவுகள் வெறுப்புகளை விலக்கி, அவைகளுடன் தேவையான உறவுகளை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் முழுமனிதப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டுமென்று வத்திக்கான் சங்கம் விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது.

நாங்கள் எங்கு வாழ்கின்றோமோ, அங்கே இருக்கும் மதங்களின் சகோதரருடன் உறவு ஏற்படுத்தி, ஒன்றாக மனித சமூகப் பிரச்சினைகளை அனு பவிப்பவர்கள் சார்பாக, அநீதிகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டுமென்றும், சங் கம் எமக்கு அறிவுறுத்துகின்றது.

(தொடரும்...)

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




# “நற்செய்தியை அறிவியுங்கள்”

## திருத்தூதுப்பீட ஆணைமடலின் நோக்கமும் உள்ளீடும்

**அருள்முனைவர் மெலின் ரெஞ்சித் அம்புறோஸ்**
**செயலர், இந்திய ஆயர் பேரவையின் திருஅவைச் சட்டப் பணிக்குழு**

2022 ஆம் ஆண்டு, மார்ச் 19 அன்று புனித யோசேப்பின் பெருவிழாவில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரோமைச் செயலகத்தைக் (Roman Curia) குறித்த “நற்செய்தியை அறிவியுங்கள்” (Praedicate Evangelium) என்னும் புதிய திருத்தூதுப்பீட ஆணை-மடலை உரோமை ஆட்சிப் பீடத்தில் வெளியிட்டார். திருத்தூது ஆட்சி மன்றத்தின் நிர்வாக அமைப்பில் சில முக்கிய மாற்றங்களை உருவாக்கியுள்ள இந்த மடல் ஜூன் 28, 1988 ஆம் ஆண்டு, புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் வெளியிட்ட “நல்ல மேய்ப்பர்” (Pastor Bonus) என்னும் திருத்தூதுப் பீட ஆணைமடலுக்கு மாற்றாக, தூய ஆவியார் பெருவிழா (ஜூன் 5, 2022) அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற திருத்தந்தை தேர்வுக்கு முந்தைய கூட்டங்களிலிருந்தும், 2013 அக்டோபர் முதல் 2022 பெப்ரவரி வரையிலான கர்தினால்கள் மன்றக் கூட்டங்களிலிருந்தும் கருத்துக்களைப் பெற்று, திருத்தந்தை பிரான்சிஸ் வழிகாட்டுதலின்படி, உலகெங்கிலும் உள்ள தலத் திரு அவை அமைப்புகளின் பங்களிப்புகளுடன் இம்மடல் வெளி வந்துள்ளது.

உரோமைச் செயலகத்தை (Roman Curia) மறைபரப்புப் பணி நோக்கி முன்னிறுத்தும் முயற்சியாகப் பார்க்கப்படும் இம்மடல், உண்மையில் திருத்தந்தை பிரான்சிஸ் தொடக்கத்தில் கொண்டிருந்த அனைத்துலகத் திரு அவைக்கான மறைபரப்பு மனமாற்றம் என்னும் பார்வையை நோக்கியே நகர்கின்றது. அதற்கேற்ப, “நற்செய்தி அறிவிப்பே திரு அவையின் முதன்மைப்பணி” என்னும் திருத்தந்தை புனித ஜான்பால் அவர்களின் “மீட்பரின் பணி” (Redemptoris Missio) என்னும் சுற்றுமடலின் வரிகளோடு இம்மடல் தொடங்குகின்றது. ஆட்சிமன்ற சீர்திருத்தங்களோடு, 2013 ஆம் ஆண்டு, மார்ச் 13 அன்று தாம் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்படுவதற்கு முந்தைய கூட்டங்களில், கர்தினால் ஜோர்ஜ் மேரியோ பெர்கோலியோவாக நம் திருத்தந்தை அடிக்கோடிட்டுக் காட்டிய கருத்துகளை மீண்டும் பிரதிபலிப்பதாக இவ்வாணை மடல் அமைந்துள்ளது. “உலகு சார் ஆன்மீகம்” (spiritual worldliness) என்பது, திரு அவையில் ஆகப்பெரும் தீமை எனக்கூறும் இம்மடல், “திரு அவை தன்னிலையிலிருந்து வெளியேறிச் சென்று விளிம்பு நிலை மக்கள் நடுவில் மறைபணியாற்றக் கடமைப்பட்டுள்ளது” எனச் சுட்டிக்காட்டுகின்றது.

### திருத்தந்தை பிரான்சிசும் முக்கிய மாற்றங்களும்

திருத்தந்தையின் நேரடித் தலைமையில் நற்செய்தி அறிவிப்பிற்கான பேராயத்தை (Dicastery for Evangelization) பேராயங்களின் பட்டியலில் முதலாவதாக உருவாக்கியதோடு, பிறரன்பு செயல்களுக்கான பேராயம் (Dicastery for the Service of Charity), கலாசாரம் மற்றும் கல்விக்கான பேராயம் (Dicastery for Culture and Education) மற்றும் நம்பிக்கைக் கோட்பாட்டிற்கான பேராயத்திற்குள் (Dicastery for the Doctrine of the Faith) சிறார்களைப் பாதுகாப்பதற்கான புதிய ஒழுங்குப் பிரிவு ஆகியவற்றையும் காலத்திற்கேற்ப உருவாக்கியிருப்பது இவ்வாணை மடலின் வளர்ச்சிக்குரிய முக்கிய அம்சமாகும்.

இதன் மூலம் தற்போது உரோமைச் செயலகமானது (Roman Curia) 16 பேராயங்களோடு, மூன்று நீதித்துறை அமைப்புகள் (Judicial bodies), நிதி அமைப்புகள் (Financial bodies), மூன்று அலுவலகங்கள் (பாப்பிறை இல்லத் தலைமையகம், பாப்பிறை திருவழிபாட்டகம், புனிதத் திரு அவையின் பாப்பிறை நிர்வாகியின் அலுவலகம்), சட்ட அலுவலர்கள் பாப்பிறையுடன் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

பாப்பிறைச் செயலகம் (Papal Secretariat) எனத் தற்போது பெயரிடப்பட்டுள்ள வத்திக்கான் நாட்டின் தலைமைச் செயலகம் (Secretariat of State), பொது விவகாரங்களுக்கான பிரிவு, நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடனான தொடர்புப் பிரிவு ஆகியவற்றுடன் புதிதாக பாப்பிறை ஆட்சிமன்ற அலுவலர்களுக்கான பிரிவையும் இணைத்துள்ளது. இவ்வாறு, உரோமைச் செயலகத்தில் (Roman Curia) இம்மடல் உருவாக்கியுள்ள சீர்திருத்தம் திருத்தந்தை பிரான்சிஸின் பணிக்காலத்தில் ஏற்பட்டுள்ள அதிமுக்கிய வளர்ச்சிகளுள் ஒன்றாகும். (1) நற்செய்தி அறிவிப்புப் பணி, (2) திரு அவையில் பொதுநிலையினரின் பங்கு மற்றும் (3) ஏழைகளுக்கான அன்புச் செயல்கள் ஆகியவற்றோடு இணைந்த உரோமைச் செயலக செயற்பாடுகள் என்பது திருத்தந்தை அதிகம் வலியுறுத்தும் கரிசனையுடன் கூடிய மேய்ப்புப்பணிக்கான முன்னுரிமையாகும்.

### முக்கியத்துவம் பெறும் மறைப்பணி

மறைபணியைத் திரு அவையின் இதயமாக மட்டுமன்றி, வத்திக்கானின் இதயமாகவும் கருதுவது இம்மடலின் அதிமுக்கிய அம்சமாகும். இம்மடல் திரு அவையின் மறைபணிச் செயல்களை நெறிப்படுத்தும் இறைமக்களுக்கான நற்செய்தி அறிவிப்புப் பேராயத்தையும் (Dicastery Evangellization)>Promoting Evangelization) ஒன்றிணைத்து “தலை யாய பேராயத்தை” (Super-Dicastery) உருவாக்கியுள்ளது. இவ்வாறு, தன்னையே தற்காத்துக் கொள்வதல்ல் மாறாக, நற்செய்தி அறிவிப்பே திரு அவையின் அதிமுக்கியப்
பணி என்னும் கருத்தை இம்மடல் வலியுறுத்துகின்றது. திருத்தந்தை பிரான்சிஸின் முதல் மடலான “நற்செய்தியின் மகிழ்ச்சி” (Evangelii Gaudium) என்னும் ஏட்டில் வலியுறுத்தப்பட்ட இக்கருத்தை உள்வாங்கியே இம்மடல் “நற்செய்தியை அறிவியுங்கள்” என்னும் வார்த்தைகளோடு தொடங்குகின்றது.

நற்செய்தி அறிவிப்புப் பேராயத்தின் அமைப்புச்சட்டத்தை உற்று நோக்கினால் இன்னும் சில பிரமிப்பூட்டும் உண்மைகள் அங்கு இழையோடுவதைக் காணலாம். பேராயங்களின் வரிசையில் (Dicastery for Doctrine of the Faith) நம்பிக்கைக் கோட்பாட்டை விட முதன்மையானதாக நற்செய்தி அறிவிப்புப் பேராயம் (Dicastery for Evangelization) உருவாக்கப்பட்டுள்ளது.

உரோமைச் செயலகத்தைக் (Roman Curia) குறித்த முந்தைய ஏடான ‘நல்ல மேய்ப்பர்’ (Pastor Bonus)ஆவணம்நம்பிக்கைக் கோட்பாட்டிற்கான பேராயத்தைத்தான் (Dicastery for Doctrine of the Faith) முதன்மையானதாகக் கருதியது. இம்மடல் உருவாக்கியுள்ள இம்மாற்றம் “வெளியேறிச் செயலாற்றும்” **(ad extra)** மறைபணியே முதன்மையானது என்னும் கருத்தை முன்னிறுத்துவதாக உள்ளது. திரு அவை குறித்துத் திருத்தந்தை பிரான்சிஸின் கண்ணோட்டமும் அதுவே.

### முக்கியத்துவம் பெறும் ஏழைகளுக்கான பிறரன்புப் பணி

திருத்தந்தை பிரான்சிஸின் மிக முக்கிய, வியக்கத்தக்க அணுகுமுறை, திருத்தந்தையின் தனிப்பட்ட பிறரன்புப் பணிகளை (Personal Charity) மறு சீரமைப்பு செய்துள்ளதாகும். இதுவரை திருத்தூதுப்பீட பிறரன்பு செயல்களுக்கான அலுவலகத்தில் திருத்தந்தையின் கரமாக ஓர் ஆயர் செயற்பட்டு வந்த நிலை, தற்போது திருத்தந்தையின் பிறரன்பு பணிக்கான பேராயம் (Dicastery for the Service of Charity of the Pope) என மாற்றம் பெற்றுள்ளது. இப்பேராயம், நற்செய்தி அறிவிப்புப் பேராயம் (Dicastery for Evangelization), 1 நம்பிக்கைக் கோட்பாட்டிற்கான பேராயம் (Dicastery for Doctrine of the Faith) ஆகியவற்றிற்கு அடுத்து ; மூன்றாவதாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு, இவ்வலுவலகப் பொறுப்பு பலகாலம் பணியாற்றியும், முக்கியத் துவம் பெறாத ஒரு வயதான ஆயருக்கு, அவரது ஓய்வுக்குப் பிறகு, அவரது பெயருக்குக் கிடைக்கும் கௌரவப் பதவியாக மட்டுமே இருந்து வந்தது. தற்போதோ, திருத்தந்தை இப்பொறுப்புக்கு கர்தினால் ஒருவரை நியமித்ததோடு, அவரது பதவியையும், அலுவலக நிதி நிலையையும், உயர்த்தி திரு அவை ஆட்சி மன்றத்தின் முக்கிய பொறுப்பாக இதனை மாற்றியுள்ளார்.

“நற்செய்தியின் **(Evangelii Gaudium)** ஏட்டைத் தொடர்ந்து அறிவியுங்கள்” மகிழ்ச்சி” “நற்செய்தியை **(PraedicateEangelium)** என்னும் தற்போதைய ஏடும் கிறிஸ்துவின் மீட்கும் அன்பைப் பறைசாற்றும் பணியே திரு அவையின் முதன்மைப் பணி என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது. இப்பறைசாற்றும் பணி நடைமுறையில் வெளிப்படும் தெளிவான இரக்கச் செயல்களோடு, இணைந்து செல்லவேண்டும். திருத்தந்தையின் கரமாக ஓர் ஆயர் செயற்பட்டு வந்த திருத்தூதுப்பீடப் பிறரன்புச் செயல்களுக்கான அலுவலகத்தைத் தற்போது திருத்தந்தையின் பிறரன்புப் பணிக்கான பேராயமாகத் திருத்தந்தை ஏன் மாற்றினார் என்ற கேள்விக்கு இதுவே பதிலாக அமைகின்றது.

இம்மடலின்படி, உலகின் எந்த மூலையில் பேரழிவுகளோ, தேவையோ ஏற்பட்டாலும் பாதிக்கப்படும் ஏழைகள், கைவிடப்பட்டோர், கைம்பெண்கள் ஆகியோருக்கு திருத்தந்தையின் பெயரால் உதவும் இப்பேராயம், கடவுளின் எல்லையற்ற இரக்கப் பெருக்கை வெளிப்படுத்தும் அமைப்பாகத் திகழ்கின்றது. திருத்தந்தையின் பதிலாளாக செயற்படும் பிறரன்புச் செயல்களுக்கான பேராய ஆணையரின் வழிகாட்டுதலுக்கேற்ப இப்பேராயம் செயற்படும். உலகில் தேவையும், அவசரமும்ஏற்படும்போது எவ்வாறு உதவுவது என்னும்திட்டங்களைத்திருத்தந்தையே தீர்மானிப்பார். திருத்தந்தையின் நற்பணிகளுக்கான நன்கொடைகளைக் கேட்டுப்பெறுவதும், அவற்றை நிர்வகித்து, தேவையில் உழலும் ஏழைகளுக்கு வழங்குவதும் இவ்வாணையத்தின் தலையாய பணியாகும்.

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் தமது “கடவுள் அன்பாயிருக்கிறார்” **(Deus Caritas est)** என்னும் முதல் சுற்றுமடலில் திரு அவை இயல்பிலேயே (1) நற்செய்தி அறிவிப்பு, (2) கடவுளை வழிபடுதல் மற்றும் (3) பிறரன்புச் செயல்கள் என்னும் முப்பெரும் பணிகளைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஏற்கனவே தமது மறைபணி என்னும் கருத்தாக்கத்தின் வழியாகத் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பாலைப் பின்பற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், பிறரன்பு பணிகளை திரு அவையின் ஆட்சிமன்றத்தில் வெளிப்படுத்தியதன் மூலம், திருத்தந்தை பதினாறாம் பெனடிக்டையும் பின்பற்றிப் பணியாற்றி வருகின்றார். குறிப்பிடத்தக்க மற்றொரு முக்கிய அம்சமும் இதில் அடங்கியுள்ளது. பொதுவாக, ஒரு திருத்தந்தையின் மறைவினாலோ, ஓய்வினாலோ உரோமைத் திருப்பீடம் காலியாகும்போது, உரோமை செயலகத்தின் **(RomanCuria)** அனைத்து ஆளுநர்களும்தங்கள் பொறுப்பை இழந்துவிடுவர் இறைவனின் இரக்கம் ஒருபோதும் தடைப்படக்கூடாது என்ற எண்ணத்தில் ஒப்புரவு அருளடையாள உள்விவகாரங்களுக்குப் (Internal Forum) பொறுப்பான கர்தினால் மட்டுமே தமது பணியைத் தொடர்ந்தாற்றுவது வழக்கமாக இருந்துவந்தது. வியப்பூட்டும் வகையில், தற்போது இந்த விலக்கு பிறரன்புப் பணிகளுக்கான பேராய ஆளுநராக உள்ள கர்தினாலுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இறைவனின் இரக்கத்தைப் போலவே, பிறரன்புப் பணிகளும் ஒருபோதும் தடைபடக்கூடாது என்ற கருத்து இதில் மேலோங்கி நிற்கின்றது. உரோமைத் திருப்பீடம் காலியாகும்போதுகூட, பிறரன்புப் பணிகளுக்கான பேராய ஆளுநராக உள்ள கர்தினாலின் பணி தொடரும் என்ற இவ்வம்சம் திருத்தந்தை பிரான்சிஸ் ஏழைகள் மீதும், தேவையிலிருப்போர் மீதும் கொண்டிருக்கும் மேய்ப்புப்பணிக் கரிசனையை வெளிப்படுத்துகின்றது.

### முக்கியத்துவம் பெறும் பொதுநிலையினர்

உரோமைச் செயலகத்தில் **(Roman Curia)** எந்தத் துறையையும் பொதுநிலையினராக உள்ள எந்த ஆணோ, பெண்ணோ தலைமையேற்று வழி நடத்தலாம் என்பதன் மூலம், தற்போது திருத்தந்தை, பொதுநிலையினருக்காகத் திரு அவை யின் கதவுகளைத் திறந்து வைத்துள்ளார். அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிவிப்பு கீழ்க்காணுமாறு கொடுக்கப்பட்டுள்ளது: “இறை மக்களில் எவரும் தங்களது ஆளுகை அதிகாரத்தின் அடிப்படையிலும் (Power of Governance),

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




# யௌவனா



**ம. மரின் றேச்சல்**

“பிறகு? என்ன ப்ளான்?” தனது பெப்சியில் கொஞ்சம் குடித்தபடி கேட்டான் ஆயவன்.

“என்ன ப்ளான்? ஓடர் பண்ண ஃப்ரைட் றைஸ் வர சாப்பிடுறது தான் ப்ளான்” நமட்டுச் சிரிப்புடன் பதிலளித்தாள் யௌவனா.

“என்ன நக்கலா?” ஆயவன் பொய்யான கோபத்தோடு பதில்கேள்வி தொடுத்தான்.

“நான் என்ன பொய்யா சொல்றன்!” அவள் கண்களில் குறும்பு மின்ன மீண்டும் சிரித்தாள்.

தான் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகும் அவளின் அந்தச் சிரிப்பில் மீண்டுமொருமுறை கரைந்து போ-னான் ஆயவன்.

ஓயாமல் இரைந்து கொண்டிருக்கும் வாகனப் பூச்சிகள், முப்பத்துநான்கு டிகிரி செல்சியஸிற்க்கு மேல் கருக்கும் சூரியன், மூச்சுவிட நேரமின்றி நாள்முழுவதையும் நிறைத்திருக்கும் விரிவுரைகள் அனைத்திலிருந்தும் தப்பிப்பிழைத்து எப்போதாவது ஒரு முறையாவது மதிய உணவிற்காக அவர்களிருவரும் சந்தித்துக் கொள்வதுண்டு. அப்படித்தான் அந்த வெள்ளிக்கிழமை விரிவுரைகளை முடித்துக் கொண்டு தாங்கள் வழக்கமாக உணவருந்தும் உணவகத்திற்கு சென்றிருந்தார்கள். தங்கள் கனவுகளில் வேரூன்றியிருந்த எதிர்காலமொன்றை நோக்கிய நெருக்கடியான அந்தப் பயணத்தில் தங்களுக்கிடையிலிருந்த அழகான காதல் கரைந்து போகாமல் பார்த்துக் கொண்டார்கள்.

“ஹலோ! என்ன துலஞ்சு போனீரா?” யௌவனாவின் குரல் மீண்டும் அவனை அந்த உணவகத்தின் வாசலோடு இருந்த இருக்கையில் இழுத்து அமர்த்தியது. ‘என்ன?”

“துலஞ்சு போனீரா எண்டு கேட்டன்”

“ம்ம்… ஓல்மோஸ்ட் ரெண்டு வருசமாகுது” அவன் குறும்பாகப் பதிலளித்தான். “காணும் என்ன” தனது புன்னகையை மறைத்துக் கொண்டு அவள் அவனை இடைமறித்தாள். இதற்குள் அவர்களின் ஃப்ரைறைறைஸ/ம் மேசைக்கு வந்து சேர்ந்தது.

“ஆ… உம்மட ப்ளான இனி எக்ஸிக்யூட் பண்ணலாம்” அவளின் தட்டில் உணவைப் பரிமாறியபடி கூறினான் ஆயவன்.

“நன்றி”

குளிரூட்டியிலிருந்து புறப்பட்ட இதமான காற்று அவர்களைத் தழுவிச் செல்ல, வெள்ளிக்கிழமை மதிய விருந்து ஆரம்பமானது.

“ஓம் யௌவனா, என்ன இந்த நேரம்? லெக்ஷெர்ஸ் இல்லயா?” ஆயவனின் குரலில் வியப்பு தொனித்தது. அவள் சாதாரணமாக விரிவுரை நேரங்களில் தொலைபேசியைப் பயன்படுத்துவதில்லை என்று அவனுக்கு நன்கு தெரியும். அவளின் விரிவுரை ஒழுங்குகளும் தெரியும்.

“ஏர்லியா முடிஞ்சு… சேருக்கு ஏதோ மீட்டிங்-ஆம்”

“ஆஹா…”

“உமக்கு இண்டைக்கு இல்ல தானே லெக்ஷெர்ஸ்” அவளின் குரலில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது.

கொஞ்சக் குழப்பம், கொஞ்சக் கோபம், மேலும் கொஞ்சம் அதிருப்தி எல்லாம் சேர்ந்து களையிழந்துபோயிருந்தது அவளின் ஒய்யாரமான பேச்சு.

“இல்ல, யௌவனா ஆர் யூ ஓகே? ஏன் ஒரு மாதிரி கதைக்கிறீர்?” ஏதோ பிரச்சினை என்பதை ஆயவன் புரிந்துகொண்டான்.

“ஒண்டுமில்ல…இங்க ஒரு சிட்டிவேஷன்…”

அவள் சற்று சோர்வாகப் பேசினாள். “தெரியுது. என்ன நடந்த?” ஆயவ-னின் குரலில் அக்கறை தொனித்தது.

“இல்லப்பா… இண்டைக்கு வீட்ட ஒராள் வந்தவர்”

“உமக்கு கலியாணம் பேசப்போகினமா?” அவன் வேடிக்கையாகக் கேட்டாலும் அத்தகைய ஒரு சம்பவம் பற்றிய நினைவே அவனைக் கதிகலங்க வைத்தது. அவள் அவனது யௌவனா அல்லவா!

“விசர் கத கதைக்காம சொல்றத கேளும் ஐசே!” அவள் சற்று எரிச்சலுடன் பதிலளித்தாள்.

“ஓகே ஓகே… சொல்லும்”

காலம ஒருதர் வந்து கேற்றடில நிண்டு கூப்பிட்டார். வீட்ட ஒருதரும் இல்ல, சோ நான் தான் போய் என்னெண்டு கேட்டன்…’ ஆயவனின் மனதில் விசித்திரமானதொரு பயம் தொற்றிக் கொண்டது. தனியாக இருந்ததால் யாரேனும் தொல்லை கொடுத்திருப்பார்களோ? திருடர்கள் வந்திருப்பார்களோ? என்று பல்வேறு கோணத்தில் அவன் இதயம் சிந்திக்கத் தொடங்கியது. அவன் மூளையோ ‘விசரா அப்பிடி ஒண்டும் இருக்காது’ என்று சமாதானம் கூறியது. மிகுந்த சிரமத்துடன் தனது போராட்டத்தை ஒதுக்கிவைத்துவிட்டு அவளின் குரலிற்கு செவிமடுத்தான்.

“அந்த மனுசன், ‘பிள்ள காலம சாப்பிடேல்ல ஏதும் இருந்தா…’ எண்டு கேட்டார்”

ஆயவனிற்கு நின்ற மூச்சு திரும்ப வந்ததுபோல இருந்தது. அத்தனை மோசமான பிரச்சினையாக இருக்காது. “காசக் குடுக்க வேண்டிய தானே?” அவன் கையோடு கூறினான்.

“குறுக்க குழப்பினா கோல கட் பண்ணிடுவன்” யௌவனா மீண்டும் கோபித்துக் கொண்டாள்.

“ரைட்” அவன் அமைதியானதும், அவள் மீண்டும் பேசினாள்.

“அப்ப நான் போய், காலம வாங்கின பாணும், ரெண்டு வாழப்பழமும் ஒரு அம்பது ரூவா காசும் எடுத்துட்டு வந்து குடுத்தன். அந்த மனுசன் ‘பழைய சறம் ஒண்டு தாவன் பிள்ள எண்டு கேட்டார்”

“நீர் என்ன சொன்னீர்?”

“நான் என்ன சொல்லுவன்? அப்பா தான் இல்லயே… நான் சொன்னன் ‘அங்கிள் அப்பா வீட்ட இல்ல, எனக்கு பழய சறம் இருக்கா எண்டு தெரியேல்ல’ எண்டு… அந்த மனுசன் இல்ல தா எண்டு நிக்கிது” அவள் மெதுவாய் சிணுங்கினாள்.

‘அங்கிள்?’ அம்மா, ஐயா, ராஸ்கல், அது, இது-இத்தனைக்கும் இடையில் அவளால் மட்டும் பிச்சைக்காரரை அங்கிளென்றோ அன்ரியென்றோ விழிக்க முடிவதை என்று எண்ணிப்பார்த்தான். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“”ஒரு சறம் தாவனம்மா… ஒரு கிழிஞ்ச சறமெண்டாலும்?”- கிழிஞ்ச சறத்த எடுத்து மடிச்சு வைக்க நான் என்ன விசரா! அவர் சாப்பாடு கேக்க மனமா எடுத்துக் குடுத்தனான் தானே? அதிலயும் ஒரு பார்வ பாத்திச்சு அந்த மனுசன்… நான் இரக்கமே இல்லாதவள் போல…” இப்போது யௌவனாவின் சிணுங்கலில் கொஞ்சம் சூடேறியிருந்தது.

இதைக் கேட்ட ஆயவன் வாய்விட்டு சிரித்தே விட்டான்.

“இப்ப ஏன் பல்லக் காட்டுறீர்?” அவள் சள்ளென்று விழுந்தாள். ஆயவன் கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு பேசத் தொடங்கினான். பெரியதொரு ஆற்றுப்படுத்தலுக்கான தேவையை அவன் உணர்ந்துகொள்ளத் தவறவில்லை.

“இதுக்கேன் இவ்வளவு டென்ஷன் யௌவனா? நான் என்னமோ எண்டு பயந்துபோனன்”

“டென்ஷன் ஆகாம? ஏதோ தந்து வச்ச ஆக்கள் மாதிரி… பாவத்துக்கு இரங்கி குடுக்கிறதும் காணாதெண்டு அவேல்ட ஜட்ஜ்மெண்ட் வேற கேக்கவேணும் நாங்கள்- ஹம்!” அவளுக்கு இன்னும் சூடு தணியவில்லை.

“பாவத்துக்கு இரங்கி குடுக்கிறத இப்பிடி சொல்லிக் காட்டலாமா?” அவன் சற்று முதிர்ச்சியாகப் பேசினான். அவர்களில் ஒருவர் சிறுபிள்ளைத்தனமாகக் கோபித்துக் கொண்டால் மற்றவர் கொஞ்சம் முதிர்ச்சியோடு நிலவரத்தை அணுகுவதற்கான புரிதல் அவர்களிடம் இருந்தது.

“என்ன இருந்தாலும் அவரேன் அப்பிடி பாக்க வேணும்? லைக், ஐம் எ க்ரூவல் விச்! வேணுமெண்டா இல்லையெண்டு சொன்னான்… எங்க கிடக்கெண்டு தெரிஞ்சா எடுத்து குடுத்திருப்பன் தானே… என்னப் பாத்தா கிழிஞ்ச சறம் குடுக்கக்கூட மனமில்லாத ஆள் போலவா இருக்கு?” அவள் படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

“ஓய்! ஏன் ஏன்… கூல் டௌன்!- இப்ப உமக்கு ஜட்ஜ்மெண்ட் பிரச்சினையா, ஜட்ஜ்மெண்ட் குடுத்த ஆள் பிரச்சினையா?”

“என்ன!?” அவள் குரல் உச்சத்தில் ஏறியது.

“என்னோட கோவிக்காம கொஞ்சம் யோசியும். உம்மட வீட்டிண்ட சைஸ்க்கு, உங்கட்ட பழைய உடுப்பு இல்லயெண்டு சொன்னா அவன் நம்புவானா?”

“நான் இல்லையெண்டு சொல்லேல்ல… எங்க இருக்கெண்டு தெரியா எண்டு தான்…”

“யௌவனா”, அவன் இடைமறித்தான். “நோர்மலா வீட்டில எது எங்க இருக்கெண்டு பொம்பிளப் பிள்ளைகளுக்குத் தானே தெரியும்…”

‘இப்பென்ன நான் க்ருவல் எண்டு நீரும் சொல்றீர், அப்பிடித்தானே?” தொலைபேசியின் மறுமுனையில் கன்னம் சிவக்கக் கோபத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் அவளின் முகத்தை ஒருநிமிடம் கற்பனை செய்துபார்த்தான் ஆயவன். அவனையும் அறியாமல் இதழோடு ஒரு புன்னகை விரிந்தது. அந்தப் புன்னகையுடனே அவன் பதிலளித்தான்.

“ஹய்யோ… நான் எங்க அப்பிடி சொன்னான்? யூ ஆர் த கைண்டஸ்ட் பேர்சன் ஐ நோ. அது உமக்கும் தெரியும். பிறகேன் ஒரு ரண்டம் பிச்சக்காரன் உம்ம ஒரு மாரி பாத்ததுக்கு இவ்வளவு அப்செட் ஆகிறீர் எண்டு தான் கேக்கிறன்… நாங்க செய்ற உதவிக்கு அவேல் க்றேட்ஃபுல்லா இருக்க வேணுமெண்டு எதிர்பாக்கிற சரியில்லயெண்டு உமக் குத் தெரியாதா?”

“நான் அப்பிடி நினைக்கேல்ல… பட்…”

“நீர் கண்ண மூடும்” ஆயவன் அவளை மீண்டும் ஒருமுறை இடைமறித்தான்.

“புழுவு புழுவு புழுவு?”

“கண்ண மூடுமன் ஐசே… கண்ண மூடி யோசியும். கொரோனா தொடங்க முதல் கொழும்பில நிண்ட நேரம் ஒரு ஃப்ரைடே லஞ் எடுக்கேக்க… ஞாபகமிருக்கா…?”

அவள் கண்களை மூடிக்கொள்ள, அவள் இதயம் சில மாதங்கள் பின் னோக்கிப் பாய்ந்தது.

குளிரூட்டப்பட்ட உணவகத்தின் வாசலோடு இருந்த இருக்கையில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

▷▷▷

“வர வர இங்க சாப்பாடு சரியில்ல…” அவன் தனது கடைசி வாய் ஃப்ரைட் றைஸ் முடியும் போது சொன்னான்.

“அதான் எண்டைல பாதியும் சேத்து சாப்பிட்டனீர்?” யௌவனா தன் கைகளைத் துடைத்துவிட்டு அமர்ந்தாள்.

அப்போது உணவகத்தின் கண்ணாடிக் கதவுகளைத் தள்ளியபடி அவள் நுழைந்தாள். அவள் கண்களில் கலக்கமும் ஏக்கமும் கலந்த ஒரு உணர்வு படர்ந்திருந்தது. கலைந்த கேசம், களைத்துப் போன முகம், வெயிலில் வதங்கிக் கருத்துப் போன தோல், வெளிறிய சட்டை, ஒரு கையில் கறுப்புப் பை, மறுகையில் ஒரு சந்தனக்குச்சுப் பெட்டி. எட்டு அல்லது ஒன்பது வயது மதிக்கத்தக்க அந்தக் குட்டிப்பெண் உணவகத்தின் கதவைத் திறந்தபோது உள்நுழைந்த சூடான காற்று யௌவனாவைத் தழுவிச் சென்று மறைந்து போனது. அவள் கதவோரமாய் ஒண்டியபடி உணவகத்தைச் சுற்றியொரு நோட்டம் விட்டாள். அவசர அவசரமாக தங்கள் மதிய உணவை உண்டு கொண்டிருந்த நாகரிக மனிதர்களிற்கிடையில் அலைபாய்ந்து கொண்டிருந்த அவளின் கண்கள் யௌவனாவின் கனி-வான கண்களில் மோதியபோது, ஒரு புன்னகையுடன் அந்த சந்திப்பை வரவேற்றாள் யௌவனா. அந்தச் சிறுமியின் கண்கள் சட்டென்று அகல விரிந்தன. அவள் மெல்ல யௌவனாவின் அருகில் வந்து தன் கையிலிருந்த பெட்டியை நீட்டினாள்.

“கீயத?” யௌவனா அதே புன்னகையுடன் கேட்டாள்.

“சீயக்” சிறுமியும் அதே பிரம்மிப்புடன் பதிலளித்தாள்.

“தெக்கக் தெண்ட நங்கி” இதைக் கேட்டவுடன் சிறுமியின் முகம் சட்டென்று பிரகாசமாய் ஒளிர்ந்தது. அவள் பிரகாசமான கண்களுடன் இரண்டு பெட்டிகளை நீட்டினாள். யௌவனா பணத்தை அவளிடம் வழங்கிவிட்டு பெட்டிகளைப் பெற்றுக் கொண்டாள். இதற்கிடையில் எங்கிருதோ வந்த உணவகத்தின் ஊழியர் அந்தச் சி-றுமியை அவசர அவசரமாக வெளியேற்றிவிட்டு யௌவனாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அவள் மெல்லிய புன்னகையுடன் தலையசைத்து விட்டுக் கண்ணாடிக் கதவிற்கு வெளியே நோட்டம் விட்டாள். அந்தச் சிறுமியின் முகத்தில் தோன்றிய பூரிப்பு இன்னும் மறைந்திருக்கவில்லை. தகித்துக் கொண்டிருந்த கொங்கிறீற் நடை பாதையில் அறுந்துபோகும் தறுவாயில் நின்ற ரப்பர் செருப்புடன் லேசாகக் கெந்தியபடி அவள் யௌவனாவின் பார்வையிலிருந்து மறைந்து போனாள்.

(தொடர்ச்சி 13ம் பக்.)

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(சங்கதி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: நம்முடைய தமிழ்த் தரப்புகள் இராஜதந்திரத்தோடு நடந்து, தமிழ் மக்களின் அபிலாசைஷகளை அடைய உண்மையாகவே முயற்கின்றார்கள் என நினைக்கின்றீர்களா?**

**ப:** சங்கதி, உங்களுக்கு ஒரு சங்கதி சொல்ல வேண்டும்! முதலில் இராஜதந்திரம் என்றால் என்ன என்று புரிந்துகொள்ள வேண்டும். தந்திரம் என்ற வார்த்தையோடு சேர்ந்து வருவதுதான் இராஜதந்திரம். தந்திரம் என்ற வார்த்தையே மிகத் தந்திரமானது! அப்படியிருக்கையில் இராஜதந்திரம் எப்படியிருக்கும் என்றால் அது மகாதந்திரமாக இருக்கும் என்று நம்முடைய புரிதலுக்காக இவ்வாறு வைத்துக்கொள்ளலாம். அந்த வகையில்தான் அண்மையில், "இராஜதந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது" என்று யாரோ ஒருவர் பகிர்ந்திருப்பதைப் படித்தேன். இதுதான் இன்றைய இராஜதந்திரம் என்றால் நம் தமிழ்த் தரப்புக்கும் இந்த வார்த்தைக்கும் எந்த உறவும் கிடையாது எனச் சத்தியம் பண்ணக்கூடாது, எனினும் சத்தியமாச் சொல்வேன்!

*(அமல், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: சிலர் தங்கள் மதிப்பைப் தாங்களே இழந்துகொள்ளக் காரணமாய் இருக்கின்றார்களே! காரணமென்ன?**

**ப:** அமல், "தவளை தன் வாயால் கெடும்" என்றொரு பழமொழி இருக்கின்றது!

*(ஞானி, முல்லைத்தீவு)*

**கே: அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்ததோடு இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்போம் என்று பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருக்கின்றார். இவர்கள் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பார்களா?**

**ப :** ஞானி, இப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள் நேற்று இன்று தொடங்கியது அல்ல. இதற்கான வயது, அதாவது பேச்சுவார்த்தைக்கான வயது ஏறக்குறைய இந்நாடு சுதந்திரம் பெற்ற வயதை ஒத்தது! அதுமட்டுமல்லாது, ஒரு சரியான, தீர்க்கமான, நடுநிலையான, பொதுவான சர்வ தேசத் தரம்வாய்ந்த ஒரு நடுநிலைமையாளர்கள் இல்லாமல் இது நடந்தால் சம்மந்தன் ஐயா 2016இல் கூறியது போல், 'அடுத்த தீபாவளிக்கிடையில் பிரச்சினைக்கான இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டுவிடுவோம்!' என்றாகத் தான்முடியும். சம்மந்தன் ஐயாவின் 'அடுத்த' என்பது கால வரையறையற்றது என்பது பின்னர் தான் புரிந்தது.

*(அருள், மன்னார்)*

**கே: அரசுக்கும் தமிழ்த் தரப்புக்கும் பேச்சு வார்த்தை தொடங்குவதற்கு முன், 'எங்களை ஏமாற்றவும் முடியாது, ஏமாறவும் மாட்டோம்' எனக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்மந்தன் கூறியிருக்கின்றார். இதுகுறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** அருள், இதில் நினைப்பதற்கு என்னயிருக்கின்றது! நேற்றுவரை நடந்ததை எல்லாம் கனவாக நினைத்துக்கொண்டு சம்மந்தன் ஐயா அப்படிக் கூறியிருக்கலாம் என நினைக் கின்றேன்! அவர்தான் என்னசெய்வார்?கடந்தகால கசப்பான ஏமாற்றங்களை எல்லாம், கனவாக நினைத்து மறந்துவிடுவதுதான் நல்லது போல் அவருக்குப்படுகின்றது என நினைக்கின்றேன்.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: காணாமல்போனோரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கையாள அதன் உதவிபெறப்படும் என அரசின் உயர்மட்டம் கூறியிருப்பதாகச் செய்தி! என்ன நடக்குமா? நல்ல முடிவுகள் வருமா?**

**ப:** ஆனந்தன், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இருந்து வேலைசெய்யவேண்டிய நேரத்தில் அவர்களைப் போர்முனையிலிருந்து 2009இல் வெளியேற்றிவிட்டு இப்போது உதவிக்கு ஆயுதப் போர் முடிவுக்கு வந்து பதின் மூன்று ஆண்டு களின் பின்னர் அரசு அழைக்கின்றது என்பதிலிருந்து இவர்கள் இவ்விடயத்தில் எவ்வளவு அக்கறையாய் இருக்கின்றார்கள் என்பது புரிகின்றதுதானே! மேலும், காணாமல்போனவர்கள் அல்ல, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பதை இவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். இருப்பினும், ஏதோ இப்போதாவது பொதுவான, நடுநிலைமையான, மனிதாபிமானப் பணிகளை மிக நீண்ட காலமாகச் செய்துவரும் ஒரு சர்வதேச நிறுவனத்தின் உதவியை நாடியிருப்பது கொஞ்சம் ஆறுதலைத் தருகின்றது.

## "நற்செய்தியை அறிவியுங்கள்"

lium - தலைமையேற்கலாம்" இயல் 2, பிரிவு 5). இதன்மூலம் இரண்டாம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினரின் பங்கு குறித்துக் கண்ட கனவைத் திருத்தந்தை நனவாக்கியுள்ளார். தலைமைப் பிறவற்றிலும் பொறுப்புகளிலும், பொதுநிலையினருக்கான வாய்ப்பு களை அதிகரிப்பதற்கான திருத்தந்தையின் இவ்வுறுதியான முடிவு மிகவும் போற்றுதற்குரிய ஒன்று. இதை இம்மடலின் முன்னுரையிலேயே திருத்தந்தை "திரு அவையில் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் அருள் பொழிவு பெற்ற பணியாளர்கள் மட்டுமே நற்செய்திப் பணியாளர்கள் அல்ல : எனவே, செயலக சீர்திருத்தம் என்பது, நிர்வாகப் பொறுப்புகளில் பொதுநிலையினருக்கு முக்கியத்துவம் தருவதாக அமைய வேண்டும்" எனத் தெளிவுபடுத்துகின்றார்.

அனைத்து ஆட்சி மன்ற அமைப்புகளுக்கும் "பேராயம்" என்னும் பொதுப்பெயரை வழங்குவதன் மூலம், செயற்படுத்தும் அதிகாரம் (Executive Power) கொண்ட அமைப்புகளுக்கும் (ஆணையங்கள் Congregations), பரிந்துரை மட்டுமே வழங்கும் அமைப்புகளுக்கும் (பாப்பிறைப் பணிக்குழுக்கள் Pontifical Councils) இடையிலான வேறுபாட்டை இம்மடல் களைகின்றது.

திருப்பணியாளர்களை நிர்வகிக்கும் ஆயர்களுக்கான பேராயம் (Dicastery for the Bishops), திருப்பணியாளர்களுக்கான பேராயம் (Dicastery for the Clergy) ஆகியவற்றைத் தவிர்த்து மற்ற அனைத்துப் பேராயங்களும் பொதுநிலை ஆண், பெண் தலைமையில் இயங்க வேண்டும் என்பதே இம் மடலின் கொள்கை. உரோமைச் செயலகத்தின் (Roman Curia) அனைத்து நிறுவனங்களும் திருத்தந்தை அளித்துள்ள அதிகாரத்தின் பெயரால் இயங்குவதால், "தங்களது தனி தகுதி வரம்பு (Personal Competence) ஆளுகை அதிகாரம் (Power of Governance) குறிப்பிட்ட பணியுரிமை (Particular Function)" ஆகியவற்றால் பொதுநிலையினரும் இவ்வமைப்புகளை நிர்வகிக்கும் உரிமை பெற்றவர்களாகின்றனர். பொதுநிலையனர்பற்றிய சங்கத்தின் இறையியலும் இதனையே எடுத்தியம்புகின்றது. இவ்வாறு, ஓர் ஆணையத்தின் தலைமைநிர்வாகியாகவோ, செயலராவோ இருக்கும் ஆயர் ஒருவர், தமது ஆயருக்கான அதிகாரத்தால் அல்ல் மாறாக, திருத்தந்தை அளித்துள்ள அதிகாரத்தின் அடிப்படையிலேயே இயங்குகின்றார் என்பதை இது தெளிவுபடுத்துகின்றது. இதனால் இந்நிர்வாக அதிகாரத்தைப் பெறுபவர் ஆயராக இருந்தாலும், துறவியாக இருந்தாலும், பொதுநிலை ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்தாலும் சமமான உரிமையையே பெறுகின்றார்.

2018 முதலே சமூகத்தொடர்புக்கான பேராயத்தின் (Dicastery for Communication) தலைமை நிர்வாகியாக திரு. பவுலோ ரூஃபினி என்னும் பொதுநிலையினர் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இன்னும் சிறப்பாக, 2022 ஆம் ஆண்டு ஜூலை 13 அன்று, உலகளவில் ஆயர்களைத் தேர்வுசெய்யும் பொறுப்பைக் கொண்ட பேராயத்தின் உறுப்பினர்களாக மூன்று பெண்களையும் (இரு துறவியர், ஒரு பொதுநிலையினர்) திருத்தந்தை நியமனம் செய்துள்ளார்.

**நிறைவாக...**

நோக்கம் செயலாக்கம் பெற்றுவிட்டது. இருப்பினும் இன்னும் நம் முன்னிருக்கும் பணி என்ன? உண்மையான சவால்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இத்தகு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில்தான்அடங்கியிருக்கிறது. அறிவியுங்கள்" (Praedicate "நற்செய்தியை Evangelium) என்னும் இந்த திருத்தூதுப்பீட ஆணை மடல் உரோமைச் செயலகத்தை (Roman Curia) சீர்திருத்த வேண்டும் என்ற திருத்தந்தை பிரான்சிஸின் பணிக்கால இலக்குகளுள் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றது. இம்மடலுக்கு முன்பும் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

*(தொடர்ச்சி 15ம் பக்கம்)*

## போதையற்ற....

3ம் பக்கத் தொடர்ச்சி)

⇨ நீங்கள் தேர்ந்தெடுத்த இலக்கு உங்களது ஒழுக்கம், உங்களது செபம், உங்களது தொழில், உங்களது வழிகாட்டிகள் அனைத்தையும் பிடித்துக் கொள்ளுங்கள். ஒரு நாள் உங்களது மிகவும் பயங்கரமான பகுதி அன்பினால் வெல்லப்படும் என நம்பி, மீள் உணர்வூட்டம் பெறுங்கள்.

⇨ ஏனையவர்களின் வளர்ச்சி இல்லாமல் உங்களது சொந்த வளர்ச்சி உருவெடுக்க இயலாது. நீங்கள் உடலின் ஒரு பகுதி. நீங்கள் மாறும் பொழுது, உங்களது முழு உடலும் மாறுகின்றது. உங்களை உள்ளடக்குகின்ற குழுமத்தோடு ஆழமாய் இணைந்திருப்பது அவசியமாகும்.

⇨ உங்களது உடலின் பகுதியாக இருப்பவர்கள் உங்களது பயணத்தில் நம்பிக்கை கொள்வது அவசியமாகும். நீங்கள் சேர்ந்து குழுமத்தோடு, சமூகத்தோடு பயணிக்கவேண்டும். சோர்ந்து போகாது சாதனையை நிலைநாட்டவேண்டும். இறைவழிப் பயணமாகும். முழுமையாகப் புரிந்து கொண்டாலும், புரியா விட்டாலும் சரி, உங்கள் சகோதர, சகோதரிகள் பின்பற்றும்படி வேண்டுகோள் விடுக்கிறீர்கள். தற்பொழுது நீங்கள் நிறைவுற்று வாழ்வது குழுமத்தின் மற்றைய அங்கத்தவர்களைத் தொடாமல் விடாது. உங்களது தெரிவுகள் புதிய தெரிவுகளை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்கின்றன.

⇨ ஆழமாக அன்பு செய்ய ஆரம்பியுங்கள். ஆழமான அன்பு தோற்றுவிக்கும் பிரிவினையையிட்டு அச்சமடையாதீர்கள். உங்களை அன்பு செய்கிறவர்கள் உங்களை வெறுத்தால், விட்டுப் போனால் அல்லது இறந்தால், உங்களது இதயம் உடைந்து விடும். ஆனால் அது ஆழமாய் அன்பு செய்வதைப் பின்னடைவுக்குக் கொண்டுவரக் கூடாது. ஆழமாக அன்பு செய்வதிலிருந்து வரும் நோவு உங்களது அன்பைப் பெருமளவு பயன்பாட்டிற்கு உள்ளாக்குகின்றது. அது நிலத்தை உடைத்து, விதை முளைத்து, வேரூன்றுவதற்கு வலிதான தாவரமாக வளருவதற்கு உதவும் கலப்பை போன்றது. உங்களது நோவில் நேராக நின்று, நீங்கள் நிற்கும் மண் வளமுள்ளதாக அமைய, அது புது விதைகளுக்குப் புது வாழ்வு கொடுக்கலாம்.

⇨ உங்களை ஆழமாக அன்புசெய்பவர்கள் உங்களின் பகுதியாவர். எவ்வளவிற்கு நீண்ட காலம் வாழ்வீர்களோ அவ்வளவிற்குக் கூடுதலான ஆட்களால் நீங்கள் அன்பு செய்யப்படுவதோடு உங்களது உள்ளகக் குழுமத்தின் பகுதியாவீர்கள். எவ்வளவிற்கு உங்களது உள்ளகக் குழுமம் வலிதாக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு உங்கள் சகோதர, சகோதரிகளைக் கண்டு கொள்வீர்கள். உங்களுக்குள் உயிர்த்துடிப்புடன் இருப்பவர்கள் உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு உயிர்த்துடிப்புடன் இருப்பார்கள். ஆழமாய் உங்களது இதயத்தின் அடி அன்பினால் உடைபடுவது போல, விளைச்சலின் அதிகரிப்பில் பெருமளவு மகிழ்வுறுங்கள்!

வளமோடு, மகிழ்வுடன் வாழ
வாழ்த்துக்கள்!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட விரையுங்கள்!

## யௌவனா....

(12ம் பக்கத் தொடர்ச்சி)

"ஓம், நினைவிருக்கு..." மெல்லிய புன்னகை இதழோடு படர,

"அது தேவையில்லாதது தானே... அந்த மனுசனே பக்கத்து வீட்டில போய் ஒரு சறம் வாங்கிக்கொண்டு நடையக்கட்டி இருக்கும், நீர் இன்னும் கிழிஞ்ச சறத்தப் பிடிச்சு தொங்கிக்கொண்டு இருக்கிறீர்"

சிறிது நேரம் தொடர்ந்த அமைதியை யௌவனா முதலில் கலைத்தாள். "ஹம்... சரிதான்" அவன் பேச்சில் இருந்த உண்மை அவளுக்குப் புரிந்தது.

"ஆ! ஆயவன்...!"

"பேந்தென்ன?" அவன் அடுத்த ஆற்றுப்படுத்தலொன்றிற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான்.

"அந்த பஸ் காசு என்ன மாதிரி?"

"எந்த பஸ் காசு?" 'அட... ஜஃப்னாக்கு வெளிக்கிடேக்க சொன்னனே... உம்மட பஸ் டிக்கெட் போக மிச்சக்காச சேத்து வைக்க சொல்லி? நெக்ஸ்ட் வீக் வந்திடுவன் தானே... யாருக்கும் சாப்பாடு வாங்கிக் குடுப்பம், எண்ட காசும் ஓரளவு சேந்துட்டு..."

ஆயவன் தன் யௌவனாவை நினைத்துப் பூரித்துப் போனான். "யௌவனா?'

"ஐ லவ் யூ!"

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## விண்ணக நுழைவின் 25 ஆண்டுகள் நிறைவு

தோற்றம்

15 . 01 . 1923



மறைவு

19 . 12 . 1997

### அமரர் அந்தோனிப்பிள்ளை போல்ராஜா

பாசையூர் – யாழ்ப்பாணம்

(ஆசிரியர் – பதுளை சரஸ்வதி மகா வித்தி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ் மாநகரசபை உறுப்பினர், உதவி தவிசாளர் – இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சமாதான நீதவான்)

*"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று நமக்கு உண்டு" (2 கொரி 5:11)*

நிலைவாழ்வின் வீடுபேற்றை
நிரந்தரமாய் அடைய
தூயவர் கூட்டத்தோடு இணைந்து
துதிபுகழ்பாடி இன்புற
மண்ணக வாழ்விற்கு விடைகொடுத்து
மங்கா ஒளிநிறை பரமனின்
பாதவடி சேர்ந்தீர்கள்

நித்தியருடன் இணைவதே
நீங்காத பேரின்பம் என்பதைக்
கண்ணியமாய் காத்து
கருத்துடன் வாழ்ந்தீர்கள்
குடும்பத்திற்காய் கடினமாய் உழைத்தீர்கள்
பிறர் வாழ உங்களைப் பகிர்ந்தீர்கள்

நற்பண்புகளை எம் இதயத்தில் விதைத்தீர்கள்
செல்வத்தில் எளிமையையும்
வறுமையில் செம்மையையும்
வாழ்ந்து காட்டினீர்கள்
நேர்மைக்கு இலக்கணமானீர்கள்
நெஞ்சுறுதியை உரமாக்கினீர்கள்

உறவுகளுக்குப் பாலம் அமைத்தீர்கள்
விசுவாசத்தில் வச்சிரத் தூணாகினீர்கள்
சமய, சமூக, கல்வி வளர்ச்சியில்
ஈடுபாட்டோடு செயற்பட்டீர்கள்
நீங்கள் கற்றுத் தந்த வாழ்வின் பாடங்களை
உங்கள் நினைவின் நன்றிக்கடனாய்
செலுத்திட எமக்காய் இறைவனிடம்
பரிந்துரைக்க வேண்டுகின்றோம்

என்றும் உங்களுக்காக இறைவனிடம் பரிந்துரைக்கும்
அன்பு மனைவி றெஜீனா,பிள்ளைகள் [லூயிபோல்ற்றன், றெஜி போல்ற்றன், இயூட் மார்செலா [கனடா],
யூஜின் லொயலா [இந்தியா] அருட்சகோதரி லுமினா போல்ராஜா [தி.கு.க],
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD -80

## விண்ணக வாழ்வின் 10வது ஆண்டு நினைவு

பிறப்பு

05 . 09 . 1956



இறப்பு

14 . 12 . 2012

### அமரர் வலன்டைன் சுவாமிநாதர் [ஜெயரட்ணம்]

அப்பாவே எமதருமை அப்பாவே!
எப்போதும் எமைக்காத்த எம் தந்தாய்
ஆலம் விழுதாய் எமைத் தாங்கிய தந்தையே
சிறுபிள்ளைத்தனமாய் தவறுகள் செய்யும்போது கண்டிக்காமல்
எமக்கு பிழையேது சரியேது எனச் சொல்லி
கண்டித்து வளர்த்தாய் கல்வியே எம் வாழ்வில் பெரிது என்றாய்
கேட்டதெல்லாம் கிடைக்கப் பெற்றோம்
இன்று கொடுப்பதற்குத் தேடுகிறோம் - உம்மை
இரவு பகல் பாராது ஓடியோடி உழைத்த உங்களை
ஓய்வெடுக்க வைத்துப் பார்க்க
ஆசையோடு காத்திருந்தோம்
ஓடிச் சென்றதேன்?

அன்புக் கணவராய் பாசமிகு தந்தையாய்
பண்புடனே வாழ்ந்த உம்மை
பரமதேவன் பரலோகத்துக்கு அழைத்தாரோ
முன்நோக்கி ஓடுகின்ற காலத்தால் முடிவதில்லை
பின்நோக்கி ஓடுகின்ற உம் நினைவுகளை நிறுத்த
நாம் வளரும்போது உம் நெஞ்சில் எமை சுமந்தாய்
இன்று எம் நெங்சில் சுமக்கின்றோம் உம் நினைவுதனை
உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

AD 78

குடும்பத்தினர்

மிசிசாகா, கனடா - 3ம் வட்டாரம், மண்டைதீவு

## 2ம் ஆண்டு நினைவு

பிறப்பு

20 . 08 . 1963



இறப்பு

28 . 12 . 2020

### அமரர் திரு. சந்தணம் சிவா [அன்ரன் றாச்]

ஓய்வுபெற்ற பொலிஸ் திணைக்கள ஊழியர் – யாழ்ப்பாணம்

ஈராண்டு கடந்ததுவே
இழந்துனை அப்பா!
இன்பமான நாட்கள் எல்லாம்
கரைந்தோடிப் போனதுவே!

கஸ்ரம் என்றால் என்னவென்று
உணர்ந்ததில்லை!
கஸ்ரப்பட்டு நீர் எம்மை
வளர்த்தபோது
கடவுள் தந்த வரம் என்னவென்று
தெரிந்துகொண்டோம்!

கடவுளே வரமாக அப்பா நீங்கள்
இருந்தபோது!
காலங்கள் கடந்தாலும்
நீங்காது உம் நினைவு
உம் ஆன்மா இறைவனின் சன்னிதியில்
இளைப்பாற இரஞ்சுகின்றோம் நாங்கள்

AD-79

மாரீசன்கூடல்,
இளவாலை

குடும்பத்தினர்

## நீங்கா நினைவுகளில் நாம்....

### 3ம் ஆண்டு நினைவு

மண்ணுலகில் 17 . 07 . 2010



விண்ணுலகில் 19 . 11 . 2019

*அமரர் சி.பென்சித் றஜாந்தி*

### 37ம் ஆண்டு நினைவு

பிறப்பு 18 . 03 . 1904



இறப்பு 18 . 12 . 1985

*அமரர் மடுத்தீஸ் முத்தையா*

தலைவராகிய ஆண்டவரே!
என் கண்கள் உம்மை நோக்கி இருக்கின்றன
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்

AD-82

*100, பழைய பூங்கா வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

*நீங்காத நினைவுகளில்*
*குடும்பத்தினர்*

## நீங்கா நினைவில் 20 ஆண்டுகள்



### அமரர் செல்லையா பேனாட் இராசேந்திரம்

" ஆண்டவரே! நீரே என் புகலிடம்: என் அரண்:
நான் நம்பி இருக்கும் இறைவன்" (திருப்பாடல் -91)

நீர் உம்மிடம் அழைத்துக்கொண்ட உமது அடியான் செல்லையா பேனாட் இராசேந்திரத்தின் பாவங்களை மன்னித்து இறை சந்நிதானத்தில் சேர்த்தருள வேண்டுமென்று மன்றாடுகின்றோம்

AD-77

*பிரிவால் துயருறும்*
*மனைவி, மகன், மருமகள், பேரன்*

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## "நற்செய்தியை" (13ம் பக்கத் தொடர்ச்சி)

**நற்செய்தி முக்கியத்துவம்**

அறிவிப்புக்கான பொதுநிலையினருக்கான பங்கு மற்றும் ஏழைகளுக்கான முன்னுரிமை என்னும் இக்கூறுகளே இப்புதிய திருத்தூதுப்பீட ஆணை மடலை இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளோடு இணைக்கின்றது. அதிமுக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை முன்னெடுக்கும் இம்மடல், நற்செய்திப்பணி, சேவை மனநிலை, கூட்டியக்க மனப்பாங்கு ஆகியவற்றை உள்ளடக்கியதே உரோமச் செயலகம் என்னும் பார்வையை இன்னும் விசாலமாக்கியுள்ளது.

திருத்தந்தையின் அரும்பெரும் பணியை உளமார வரவேற்பதோடு, திரு அவையின் சீடர்களாகிய இறைமக்கள் நாம் ஒவ்வொருவருமே "திருத்தந்தை பிரான்சிஸின் மனநிலை" கொண்டவர்களாக வாழவும் பணியாற்றவும் முன்வருவோம்.

## பகிர்வின் உணர்வோடு ...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதார நெருக்கடி மிகுந்த இக்காலத்தில் ஏழை, எளிய மக்களோடு அவர்களது வறுமையில், தேவையில் எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து, அவர்களது வாழ்வை வளமாக்கி மகிழ்வுறச் செய்ய வேண்டுமென்பதே கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு விடுக்கும் அழைப்பாகும். "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:41) எனவே இவ்வாண்டில் கிறிஸ்து பிறப்பைப் பகிர்வின் உணர்வோடு அர்த்தமுள்ள மகிழ்ச்சியின் பண்டிகையாக்குவோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2025 ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளார். இவ் யூபிலி ஆண்டின் கருப்பொருளாக "எதிர்நோக்குடன் திருப்பயணிகள்" (PILGRIMS OF HOPE) தரப்பட்டுள்ளது. யூபிலி விழாவுக்கு எம்மை ஆயத்தப்படுத்தும் முகமாக அடுத்த ஆண்டு முதல் "எதிர்நோக்கு", "திருப்பயணிகள்" எனும் இரு சொற்பதங்களையும் 2023ம் புத்தாண்டில் ஆழ்ந்து தியானிக்குமாறு திருத்தந்தை விரும்புகின்றார்.

போதை எனும் வாதையில் சிக்கிப் பாதை தெரியாது நடைப்பிணங்களாக எம் சமூகம் இன்று பயணிக்கின்றது. இந்நிலை மாறி, புத்தாண்டில் தமிழ்ச் சமூகம் சுபீட்சம் நோக்கிப் பயணிக்க இறைவேண்டல் செய்வோம். கொரோனா பெருந்தொற்றின் விளைவாக முழு உலகும் பொருளாதார வளத்தில் நலிந்துள்ளமை உலகறிந்த உண்மையே. எம் நாடும் மிகமோசமான வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருப்பது வேதனைக்குரியது. இதற்கு எம் நாட்டின் அரசியல் நிலைமையும் ஊழலின் உச்ச நிலமையுமே காரணம் என பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். நீதியோடு, நேர்மையோடு மக்களுக்காகப் பணியாற்றும் அரசியல் தலைமை கடந்த காலங்களில் இல்லாமை துரதிஷ்ட வசமானது. புத்தாண்டில் இலங்கை அரசியலில் மாற்றங்கள் நிகழ உழைப்போம். பிறக்கவிருக்கும் பாலக இயேசு, ஆண்டில் நல் எதிர்நோக்கையும் அன்பையும், நம்பிக்கையையும், அமைதியையும் கொண்ட வாழ்வை எல்லோருக்கும் அருள்வாராக. கிறிஸ்து பிறப்பு விழாவிலும், புத்தாண்டிலும் உங்கள் குடும்பத்தினருக்கு இறையாசீரை வழங்கி நிற்கின்றேன்.

## விண்ணக வாழ்வின் 2ம் மாத நினைவு

பிறப்பு 03 . 11 . 1941



இறப்பு 27 . 10 . 2022

### அமரர் Dr. நெல்சன் அம்புறோஸ்

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11-25)*

இவர் எம்மோடு வாழ்ந்த நாட்களில் யாம் அறிந்தவைகள் இவை : இவர் தன் வாழ்நாட்களை குடும்பம், பிள்ளைகள், உறவுகள், நண்பர்கள் என எல்லோருடனும் சந்தோஷமாக வாழ்ந்து இன்று எம்மை விட்டுப் பிரிந்து இறைவனோடு ஒன்றித்துள்ளார். இவர் பிறருக்குச் செய்த உதவிகள் எண்ணிலடங்காதவை. பத்திரியார் கல்லூரியின் தேவைகள் அறிந்து உதவியுள்ளார். சிட்னி தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் முன்னாள் தலைவராகப் பணிபுரிந்தார். இறைவனுக்குப் பணியாற்றிய இவர் இறைவன் கொடுத்ததை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார். கொடிய நோயால் பாதிக்கப்பட்டும், தன் இறுதிக் காலங்களைக் குடும்பத்துடன் சந்தோஷமாய் வாழ்ந்தார். இவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும் எம் நினைவுகளுடன் உயிர் வாழ்வார்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் எம் குடும்பத்தில் எம்மோடு வாழ்ந்து இறந்து போன அனைத்து ஆன்மாக்களுக்காகவும் பின்வரும் ஆலயங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் | 10.01.2023 காலை 5.30 மணி - செவ்வாய் |
| குருநகர் புனித யாகப்பர் ஆலயம் | 10.01.2023 காலை 5.30 மணி செவ்வாய் |
| புனித மரியன்னை பேராலயம் | 10.01.2023 காலை 5.30 மணி செவ்வாய் |
| தாழையடி புனித அந்தோனியார் ஆலயம் | 10.01.2023 மாலை 5.00 மணி செவ்வாய் |
| செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயம் | 12.01.2023 மாலை 5.00 மணி வியாழன் |
| வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயம் | 10.01.2023 மாலை 5.00 மணி செவ்வாய் |

இவரின் பிரிவால் துயருறும்
அம்புறோஸ் வில்சன்
குடும்பத்தினர்

AD-86

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

"இருள் சூழ்ந்த பள்ளத்தாக்குகளில் நடக்க நேர்ந்தாலும் நான் அஞ்சேன் ஏனெனில் நீர் என்னோடு இருக்கின்றீர்" (திருப்பாடல் 23:4)

அன்னை மடியில் 08 . 04 . 1953



இறைவன் அடியில் 25 . 11 . 2022

### அமரர் மரியகொறற்றி அருள்நேசன்

அடியாளின் ஆன்ம சாந்திக்காக 03.01.2023 செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு பரிசுத்த புதுமை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றிச் செபிக்க அன்புடன் வேண்டுகின்றோம்.

*என்றும் அன்புடன்*
*குடும்பத்தினரும், சகோதரர்களும்*

AD-85

## 1ம் ஆண்டு அன்பு நினைவு

உமது ஆன்மா இறை இல்லத்தில் அமைதி காணத் தினமும் இறைவனை வேண்டுகின்றோம்

மலர்வு 29 . 11 . 1947



உதிர்வு 22 . 12 . 2021

### திரு. மரியநாயகம் மேரி யோசெப் ஸ்ரான்லி

அப்பா! அன்பும் அரவணைப்பும்
அருமையாக அனுபவித்தோம்
பண்பையும் பாசத்தையும்
பக்குவமாய்த் தெரிந்துகொண்டோம்
நீதியையும் உண்மையையும்
உங்கள் வாழ்வோடு கண்டுகொண்டோம்
கடின உழைப்பையும், விடா முயற்சியையும்
உங்கள் கடமையில் உணர்ந்து கொண்டோம்
பகிர்வையும் பரிவையும்
உங்களில் வியந்து கண்டோம்
காலம் கொடுத்த விடையுடனே
கடந்து சென்றீர்கள்...
கலங்கினாலும் கண்ணீரில் மிதந்தாலும்
கடவுளுடன் இருக்கின்றீர்கள் என்று
நிம்மதி அடைகின்றோம்.

**உங்கள் வாழ்வைப் பின்பற்றுகின்றோம் எங்களுக்காகவும்**
**இறைவனை மன்றாடுங்கள்**

குடும்பத்தினர்

AD-83

## நெஞ்சம் மறவாத 50ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 24 . 01 . 1933



விண்ணில் 23 . 12 . 1972

### அமரர் சின்னப்பு வின்சென்ற்

இறைவனில் இன்புற்றிருக்க, கனத்த இதயத்துடன் இறைவனை வேண்டுகின்றோம்

*என்றும் மாறாத நினைவுகளுடன் இறைவனை வேண்டி நிற்கும்*
*மனைவி, சகோதரங்கள்*

மல்வம், உடுவில்

AD-87

# கத்தோலிக்க சட்டவாளர்களின் சிறப்பு ஒன்றுகூடல்



யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க சட்டவாளர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அடிகளின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி நன்றித்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

தொடர்ந்து சட்டவாளர்களினுடனான கலந்துரையாடல் பங்குப் பணி மனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர், மறைமாவட்ட நிதிமுகாமையாளர், குருக்கள், கத்தோலிக்க சட்டவாளர்கள், சட்டக்கல்லூரி மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# போதைப் பொருளுக்கு எதிராகத் தீவக மக்கள் எழுச்சி




போதைப் பொருள் பாவனைக்கெதிராக தீவக மறைக்கோட்ட இளை யோர்களால் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வுப் பேரணி கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேலணைப் பிரதேசத்தில் நடைபெற்றது.

இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்ட இப்பேரணி வேலணை மண்கும்பான் மற்றும் வேலணை வங்களாவடி ஆகிய இடங்களி லிருந்து ஆரம்பிக்கப்பட்டு சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருத்தலத் திற்கு வந்தடைந்து நிறைவுபெற்றது.

இப்பேரணியில் இளையோர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு நடைபவனியாகப் பேரணியில் கலந்து கொண்டனர்.

# வெளிநாடுகளுக்கான இலங்கையின் புதிய தூதுவர் குழு யாழ். ஆயருடன் சந்திப்பு



இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டுக்குப் புதிதாக நியமனம் செய்யப் பட்ட தூதுவர் குழு யாழ். குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பிரான்ஸ், பஹ்ரைன், வியட்னாம், ஜேர்மனி, லெபனான், இஸ்ரேல், எத்தியோப் பியா, பிலிப்பைன்ஸ், ஜோர்தான், அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய 12 நாடுகளுக்குப் புதிதாக இலங்கையால் நியமிக்கப்பட்ட தூதுவர் குழுவே கலந்து கொண்டது. இச்சந்திப்பின்போது யாழ். ஆயர் அவர்கள் தமிழ்ச் சமூகம் இன்று எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அவர்களுக்கு எடுத்துரைத்தார்.




# குருத்துவ வாழ்வில் 59 ஆண்டுகள்

**ஓய்வு நிலை ஆயர்**
**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின்**
**குருத்துவ அபிஷேக நாள் (21.12.2022)**



குருத்துவ வாழ்வில்
ஐம்பத்தொன்பது அகவையில்
ஆயனே உமது நாமம் வாழ்க!
உடல் உள நலன்கள் பலவும் பெற்று
அன்னை மரி அருளில் நீண்ட பல
ஆண்டுகள் வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஒளி விழா




யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை ஒழுங்குசெய்த 2022 ஆம் ஆண்டுக்கான ஒளி விழா நிகழ்வு கடந்த 20.12.2022 அன்று காலை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலைப்பீடாதிபதி கே. சுதாகர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் ஒளி விழாவில் பல்கலைக்கழக மாணவர்களினால் “விடிவெள்ளி காட்டிய விடியல்” (மன்னார் மாதோட்டப் பாங்கு) என்னும் நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வுகள் யாவும் துறைத் தலைவர் பேராசிரியர் அருட்பணி போல் றொகான் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

# திருமறைக் கலாமன்றத்தில் "திருமகனே தாலேலோ" கிறிஸ்து பிறப்பு நிகழ்வு



யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட “திருமகனே தாலேலோ” கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பு நிகழ்வு கடந்த 17ஆம் திகதி சனிக் கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் பிரதம விருந்தி னராகக் கலந்து நிகழ்வை சிறப்பித்ததுடன் சிறப்பு நிகழ்வாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்களினதும் மற்றும் யாழ். மறைக்கோட்ட ஆலயங்களின் பாடகர் குழாம்களினதும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள் இடம்பெற்றன.

## நெவாட் பௌண்டேஷன் லிமிட்டெட்

மீன்வலை உருவாக்கல் தொழிற்சாலை



வடக்குக் கிழக்கு மக்களின் கடல் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும்,மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உங்கள் தேவைக்கேற்ப வலைகளை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்.



- ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரத்தில் முன்னணிவகிக்கும் யாணைக் (Yarn) கொண்டு, வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- நன்னீர் மீன் பிடிப்பதற்கான வலைகளையும் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
- 3 இழை - 60 இழை வரையிலான வலைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- விவசாயத் தேவைகளுக்கான வலைகளும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- உங்களுக்குத் தேவையான நைலோன் நூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (3 இழை – 60 இழை வரை 100 கிராமாகப் பெற்றுக் கொள்ளலாம்)

**எம் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.**

No.647, Beach Road, Jaffna, Sri Lanka E-mail: nefadfishnets@yahoo.com
Tel: +(94) 21 222 8919 Fax: +(94) 21 222 4781

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.